பக்கங்கள்: எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

உங்கள் கண்களைப் பரிசோதித்து கண்ணாடி பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்.
எரிக் கணேஷ்
564, 566, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்;
(சி-2751)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஐப்பசி 19 திங்கட்கிழமை (5-11-2001) தொலைபேசி: 3378 ஒலி 329

## யார் ஆட்சிக்கு வந்தாலும்
# நாட்டில் கட்டளையிடுவது ஜனாதிபதி சந்திரிகாவே!

## அமைச்சர்களையும் அவரே நியமிப்பார்
### பிரதமர் ரட்ணசிறி உரை

(அரசியல் நிருபர்)

**எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி 120 பாராளுமன்ற ஆசனங்களைப் பெற்றால் மாத்திரமே ஆட்சி அமைக்கக்கூடியதாகஇருக்கும். ஆனால் அக்கட்சி ஒருபோதும் 120ஆசனங்களைப் பெறமாட்டாது.**

**நாட்டைத் துண்டாடுவதா?, ஐக்கிய இலங்கையா என்பதை இத்தேர்தலில் மக்கள்தான் தீர்மானிப்பார்கள். பிரிவினைக்கு பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு ஒருபோதும் இடமளிக்காது. மீண்டும் நாமே ஆட்சிஅமைப்போம் என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா தெரிவித்துள்ளார்.**

களுத்துறையில் நடைபெற்றபொதுஜனஐக்கியமுன்னணியின் தேர்தல பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா மேற்கண்டவாறு சூளுரைத்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில்.

நாட்டில் தற்போது நடைமுறையில் உளள விகிதாசார தேர்தல் முறையை மாற்றி அமைப்பதற்கும் தொகுதிவாரிப் பிரதிநிதித்துவத்தை

(08 ம் பக்கம் பார்க்க

## கணிப்பீட்டு முடிவுகள் அடுத்த வாரம்

(யாழ்ப்பாணம்)

தேர்தல் பிரசாரங்கள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் ஒக்-மாகிஸ்மாட் நிறுவனம் மற்றும் இலங்கை மதிப்பீட்டு ஆய்வு நிறுவனம்மேற்கொண்டுவரும் பொதுத்தேர்தல் பற்றிய முதற்கட்ட அபிப்பிராய வாக்கெடுப்பு முடிவுகள் அடுத்த வாரம் வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஐ.தே.க குழப்பம் செய்தால் துருப்பிடித்த ஆயுதங்களுக்கு உயிரூட்ட வேண்டிவரும்!
### அனுரா எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் அரசியல் வரலாற்றில் ண்டாரநாயக்காக்கள் மறைந்து ஓடியதாக அரசியலில் சரித்திரம் இல்லை என்பதைமுன்னாள் அமைச்சர் எஸ் பி திஸாநாயக்கா உணர்ந்துகொள்ள வேண்டுமென்று முன்னாள் சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்க காலியில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுபபோதுகூறியுள்ளார். அங்கு அவர் மேலும் பேசுகையில் தேர்தலின் பின்புஒரு இலட்சம் பேருடன் ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிடப்போவதாக எஸ் பி திஸாநாயக்கா கூறியுளளார்.

( 8 ஆம் பக்கம் பார்க்க )

## 48வன்முறைச்சம்பவங்கள் நேற்று இடம்பெற்றுள்ளது

(கொழுபபு)

நாடெங்கிலும் தேர்தல் பிரசாரநடவடிக்கைகள் தீவிரம் அடைந்துவரும் வேளையில் தேர்தல் வன்முறைச் சம்பவங்களும் அதிகரித்துள்ளது.

வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்ட தினத்திலிருந்து நேற்றுவரை 289 தேர்தல் வன்முறை தொடர்பான முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதில் நேற்றையதினம் 48

(8 ம் பக்கம் பாாக்க)

## வன்னிமாவட்ட வேட்பாளர்களுடன் இராணுவ அதிகாரி சந்திப்பு!

(வவுனியா)

வன்னிமாவட்டத்தில் தேர்தல்களத்தில் குதித்துள்ள கட்சிகளின் முதன்மை வேட்பாளர்களையும், சுயேட்சைக் குழுக்களின் முதன்மை வேட்பாளர்களையும் வவுனியா மாவட்ட இராணுவப் பொறுப்பதிகாரி கேணல் மகேஸ்சமரசிங்க,வவுனியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி உத்தியோகத்தர் கே. கணேஷ் ஆகியோர் தத்தம் காரியாலயங்களுக்கு அழைத்து தேர்தல் நேர்மையாகவும், ஒழுங்காகவும், நீதியாகவும் நடைபெறுவற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுள்ளார்.

இது தொடர்பான மாநாட்டினை வவுனியா மாவட்ட இராணுவப் பொறுப்பதிகாரி தனது காரியாலயத்திலும், வவுனியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி உத்தியோகத்

(8-ம் பக்கம் பார்க்க)

## நாட்டில் நிலவும் பிரிவினையால் தீவிரவாதிகளே பயனடைகின்றனர்!
### அமைச்சர் சரத் அமுனுகம உரை

(கொழும்பு)

இந்நாட்டில தலை தூக்கி உள்ள தீவிரவாதம் தோற்கடிக்கப் படுவதற்கு மக்களது ஒற்றுமை மிகவும் அவசியமானதாகும் என அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்று கண்டியில் நடைபெற்றது அக் கூட்டத்திலேயே அமைச்சர்சரத் அமுனுகம மேற்கண்டவாறுதெரிவித்துள்ளார்; அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

நாட்டில் நிலவிவரும் பிரிவினையால்தீவிரவாதிகளேபெரிதும் பயனடைந்து வருகின்றனர் இதனால்நாட்டின்தேசிய அபிவிருத்தி பெரிதும் பாதிக்கப்படுகிறது இதனை அரசியல் வாதிகளும், ஆட்சித் தலைவர்களும் நன்குணர்ந்து செயற்படவேண்டும் என்று கூறினார். (வ)

## வவுனியாபஸ்நிலையத்தில் ஐ.தே.க ஆர்ப்பாட்டம்

(வவுனியா)

வவுனியா பேருந்து நிலையத்தில்நேற்றுக் காலை ஆர்ப்பாட்டமொன்றை ஐக்கியதேசியக் கட்சி நடத்தியுள்ளது. கட்சியின் வன்னி மாவட்ட முதன்மை வேட்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சாநிதகுமார பூஞ்சி தலைமையில் நடைபெற்ற இவ்வார்பபாட்டத்தில் நூற்றுககு மேற்பட்ட ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.

சுமார் ஒரு மணி நேரம்

(8 ம் பககம் பார்க்க)

## என்மீது சுமத்தும் நிதி மோசடியை நிருபித்தால் அரசியலை துறப்பேன்
### எஸ். பி. திஸாநாயக்கா சவால்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கா என்மீது நிதிமோசடிக் குற்றச்சாட்டை நிருபிப்பாரானால்தான் அரசியலில்இருந்து ஒதுங்கிக் கொள்ள தயாராக இருப்பதாக முன்னாள் சமுர்த்தி அமைச்சர் எஸ்.பி திஸாநாயக்கா தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தோதல் பிரசாரக் கூட்டத்தில் பேசும்போதே அமைச்சர் மேற்கண்டவாறுதெரிவித்துள்ளார்.

அங்கு உரையாற்றிய எஸ் பி திஸாநாயக்காமேலும் தெரிவிக்கையில்;

பொது ஜன ஐக்கிய முன்னணியில் அரசில் இருந்து நான் வெளியேறிய பின் என்னைப்பற்றிய பொய்ப்பிரசாரங்களில் அரசு தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. அரசினால் என் மீது சுமத்தப்பட்டுவரும் பொய்க் குற்றச்சாட்டுகளுக்கு எதிர்வரும் பொதுத் தேர்தலில் அரசுக்கு தகுந்த பாடம் புகட்டுவார்கள் என்றும் அவர் கூறினார். (வ)

## தமிழ்க்கட்சி கூட்டமைப்பில் ஏனையதமிழ்க் கட்சிகளும் இணைந்து கொள்ள வேண்டுமெ
### செல்வம் கோரிக்கை

(வவுனியா)

நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பிலும் அங்கம்வகிக்காத ஏனைய தமிழ்க் கட்சிகள் தமிழ் மக்களின் விடுதலையை நோக் மாகக் கொண்டு தமது சிந்தனையில மாற்றத்தை ஏற்படுத்தி கூட்டமைப்பில்இணைந்துகொளளவேண்

[8ம்- பககம் பார்க்க]

## யாழ்.குடாநாட்டில் 457 வாக்களிப்பு நிலையங்கள்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் டிசம்பர் மாதம் 5 ம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தலுக்கு யாழ்ப்பாணக் குடாநாட்டில் 457 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும் என தேர்தல்

(8-ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

**ENGLISH**
MODEL PAPER
OCTOBER - 2001

பயிற்சி நிச்சயம் பலன் தரும் O/L ஆங்கில மாதிரிவினாத் தாள்
யாழ்ப்பாணம் பூபாலசிங்கம், மானிப்பாய் நாயகபாலன் உட்பட அனைத்து புத்தக வியாபாரிகளிடமும் கிடைக்கும். ரூபா: 10/- மட்டுமே. ஆசிரியர் K சோமசுந்தரம், சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய். (3902)

## திருடர் தொல்லை

(கோப்பாய்)

இருபாலை கிழக்குப் பகுதியில் திருடர்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்கள் பெரிதும் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதைவிடச் சமூகச் சீர்கேட்டை உருவாக்கும் சூதாட்டம், கசிப்பு உற்பத்தி முகாம்கள் அப்பகுதியில் அமைந்துள்ளதாகவும் அவை பற்றி சம்பந்தப்பட்டவர்களிடம் முறையிட்டபோதும் ஆக்கபூர்வமான எத்தகைய நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (எ-79)

## கசிப்பு விற்றோர் குற்றப் பணம்

(துன்னாலை)

வடமராட்சிப் பகுதிகளான புலோலி மேற்கு, உடுப்பிட்டி 15ஆம் கட்டை, அலவாய், கரவெட்டி வடக்கு, துன்னாலை, குடத்தனை ஆகிய பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு, கள் விற்பனை செய்யப்படுவதாகக் கிடைத்த தகவலை அடுத்து அப் பகுதிகளில் வடமராட்சிப் பிரதேச மதுவரிப் பொறுப்பதிகாரி தலைமையில் தேடுதலை மேற்கொண்ட குழு மேற்படி சட்டவிரோத மது விற்பனையில் ஈடுபட்ட 10 பேரைக் கைது செய்து பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத் தொடுத்ததில் அவர்களிடம் குற்றப் பணமாக 18250 ரூபா அறவிடப்பட்டுள்ளது. இத்தகவலைத் தெரிவித்த வடமராட்சிப் பிரதேச மதுவரிப் பொறுப்பதிகாரி மோகன் சஞ்சேறாயு சட்டவிரோத விற்பனையாளர் இருவருக்கு பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார். (எ-41

## பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

விளையாட்டுத் துறையில் நீண்டகாலம் அயராது உழைத்துவரும் டேவிட் தம்பிராஜாவின் சேவையைப் பாராட்டும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்ட விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.ப.நோ.கூ. சங்க கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது யாழ். பல்கலைக்கழக கல்வியியல்துறைத் தலைவர் பேராசிரியர் க. சின்னத்தம்பி 'விளையாட்டுத்துறை வித்தகர்' என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார்.

முன்னாள் வடக்கு-கிழக்கு மாகாணசபை விளையாட்டுத் துறைப் பணிப்பாளர் மரியதாசன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் முன்னாள் மாவட்ட நீதிபதி திரு. திருநாவுக்கரசு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

பொன்விழா மலரினை டி. எ. எம் குணசிங்கம் வெளியிட்டு வைத்தார். சு. ரா. புவனேந்திரன் வரவேற்புரை நிகழ்த்தினார். யாழ்ப்பாண ஏம பிரதம தபாலதிபர் க. மார்க்கண்டன் உட்பட பலர் இந் நிகழ்வில் உரையாற்றினார். (உ-106)

---

# நல்லூர் பிரதேச சபை
## திருநெல்வேலி

## வேலைகள்
# கேள்வி அறிவித்தல்
## 2001

01. கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி:- 09-11-2001 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-00 மணி வரை

02. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி: 12-11-2001 திங்கள் நண்பகல் 12-00 மணி வரை

03. கேள்விகள் திறக்கும் திகதி; 12-11-2001 திங்கள் பிற்பகல் 2-00 மணிக்கு ஏனைய விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

| இல. | சபை நிதி வேலைகள் விபரம் | மீளளிக்கப்படும் கேள்விப்பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர பணம் ஜீ.எஸ்.ரி. நீங்கலாக |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| 1. | காரைக்கால் தொடர் வீதி, இணுவில் | 4000 | 400 |
| 2. | குளப்பிட்டி காளி கோவில் வீதி கொக்குவில் | 3500 | 350 |
| 3. | வைத்திலிங்கம் வீதி கொக்குவில் கிழக்கு | 5500 | 550 |
| 4. | காந்திஜீ வீதி, கொக்குவில் மேற்கு | 3000 | 300 |
| 5. | சந்திரசேகரப்பிள்ளையார் வீதி, நல்லூர் வடக்கு | 3500 | 350 |
| 6. | விதானையார் வீதி, கொக்குவில் கிழக்கு | 2500 | 250 |
| 7. | தில்லையம்பதி சிவகாமி அம்மன் வீதி, கோண்டாவில் | 2000 | 200 |
| 8. | பழைய தபாற்கந்தோர் வீதி, கொக்குவில் கிழக்கு | 5000 | 500 |
| 9. | முத்தட்டுமட தொடர் வீதி, கோண்டாவில் மேற்கு | 2500 | 250 |
| 10. | அரசடி வீதி, திருநெல்வேலி, | 5500 | 550 |
| 11. | எம் எஸ் 1ம் குறுக்கு வீதி, கோண்டாவில் | 4000 | 400 |
| 12. | கலைவாணி ச. ச. நி. வீதி தொடர் வேலை | 2000 | 200 |
| 13. | கலைவாணி ச. ச. நி வீதி, பெட்டி மதகு அமைத்தல் பூநாறிலேன் கொக்குவில் | 2000 | 200 |
| 14. | முருகன் வீதி வெள்ளைவாய்க்கால் வீதியும் குடியேற்றத்திட்ட 6ம் குறுக்கு வீதியும் திருநெல்வேலி | 10000 | 1000 |
| 15. | திருநெல்வேலி குடியேற்றத்திட்ட 2ம், 3ம், 4ம், 5ம் குறுக்குவீதிகள் திருநெல்வேலி | 7500 | 750 |
| 16. | முருகன் வீதி குடியேற்றத்திட்ட இணைப்பு வீதி, திருநெல்வேலி | 5000 | 500 |
| 17. | செருக்கப்புலம் வீதி, கொக்குவில் கிழக்கு | 6000 | 600 |
| 18. | கலட்டி 1ம் குறுக்கு வீதி கோண்டாவில் | 3500 | 350 |
| 19. | நாவலடி வீதி, திருநெல்வேலி | 4500 | 450 |
| 20. | திருநெல்வேலி திறந்த சந்தையை நவீனசந்தையுடன் இணைத்துக் கட்டல் | 10000 | 1000 |
| 21. | நவீன சந்தை நீர்த்தாங்கி, மலகூடம் அமைத்தல் வேலை திருநெல்வேலி | 4000 | 400 |

### பன்முகப் படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட வேலைகள் விபரம்

| இல. | வேலைகள் விபரம் | மீளளிக்கப்படும் கேள்விப்பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர பணம் |
|---|---|---|---|
| 1. | வராகி ச. ச நி புனரமைப்பு கொக்குவில் மேற்கு | 1500 | 250 |
| 2. | கொக்குவில் மத்திய ச. ச. நி புனரமைப்பு | 1000 | 250 |
| 3. | நாராயண ச. ச. நி - தொடர் வேலைகள் கோண்டாவில் | 750 | 250 |
| 4. | பிரம்படி ச ச, நி மீதிவேலை கொக்குவில் | 750 | 250 |
| 5. | சிறி சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தடி நீர்த்தாங்கி அமைத்தல் கொக்குவில் | 1000 | 250 |
| 6. | ஞானவைரவர் சன சமூக நிலைய புனரமைப்பு திருநெல்வேலி கிழக்கு | 750 | 250 |
| 7. | நேதாஜீ சனசமூக நிலைய புனரமைப்பு பொற்பதி வீதி கொக்குவில் | 500 | 250 |
| 8. | மகமாஜீ ச. ச. நிலைய புனரமைப்பு கொக்குவில் கிழக்கு | 400 | 250 |

க. மணிபல்லவராஜன்
தலைவர்
நல்லூர் பிரதேசசபை
திருநெல்வேலி

நல்லூர் பிரதேச சபை
தலைமை அலுவலகம்
திருநெல்வேலி
02-11-2001

(கி-2814)

---

## குறை நிவர்த்திசேவை இன்று இடம் பெறா

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தினால் இன்றும் நாளையும் வடமராட்சி கல்வி வலயத்தில் ஏற்பாடு செய்திருந்த குறைநிவர்த்திசேவை தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர் வரும் வியாழன் வெள்ளி ஆகிய தினங்களில் பிற்பகல் 1மணிக்கு இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தென்மராட்சி வலயத்திற்கான குறை நிவர்த்திசேவை திட்டமிட்டபடி எதிர்வரும் புதன் கிழமை இடம் பெறுமென்றும் இலங்கைஆசிரியர் சங்கச் செயலாளர் க. குமாரசாமி அறிவித்துள்ளார். (ந)

## அரச ஊடகங்களுக்கு எதிராக நடவடிக்கை

(கொழும்பு)

பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள இச்சந்தர்ப்பத்தில் அரச ஊடகங்கள் எதிர்க்கட்சிகளைக் கடுமையாகவிமர்சிப்பது தொடர்பாக தொழிற் சங்கநடவடிக்கை மேற்கொள்ளப்படுமென தேசிய ஊழியர் சங்கம் அரச ஊடக நிறுவனங்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும்; எதிர்க்கட்சி அணியைக் கடுமையாகத் தாக்கி அரச ஊடகங்கள் நடத்தும் ஒருதலைப் பட்சமான பிரசாரத்தை எமது சங்கம் கடுமையாகக் கண்டிக்கிறது.

தேர்தல் சட்டதிட்டங்களை மீறி பொது மக்களின் நிறுவனங்களையும் சொத்துக்களையும் அரசாங்கம் தனது பிரசாரத்திற்காகப் பயன்படுத்துகிறது.

அரசாங்கம் இவ்வாறு நடத்தும் ஒருதலைப் பட்சமான பிரசாரத்தை நிறுத்துவதற்கு இன்னும் சில தினங்களுக்குள் நடவடிக்கை எடுக்காவிட்டால் குறித்த அதிகாரிகளுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [த-5]

## மாணவர் ஒன்றியம் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

காணாமல் போனோர் சங்கத்தினால் இன்று ஏற்பாடு செய்துள்ள மறியல் போராட்டத்திற்கு யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் ஆதரவு தெரிவித்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. (ந)

## ஆறுபடையினர் காயம்

(மட்டக்களப்பு)

வெலியோயா மணலாறுப் பிரதேசத்தில் கடந்த புதன் கிழமை விடுதலைப்புலிகள் மேற்கொண்ட மோட்டார் தாக்குதலில் ஆறு இராணுவச் சிப்பாய்கள் காயமடைந்துள்ளனர்;

இதேவேளை நேற்றுமுன்தினம் மேற்படி பிரதேசத்தில் புலிகள் மேற்கொண்ட மற்றொரு தாக்குதலில் ஒரு படை வீரர் காயமடைந்துள்ளார். (ந-4)

## தேர்தல் வன்முறை ஜே.வி.பி. உறுப்பினர் படுகொலை

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தில் நேற்று முன்தினம் தேர்தல் பிரசாரத்தின் போது இடம் பெற்ற வன்முறையில் ஜே.வி.பி உறுப்பினர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை மஹியங்கனை வாசியான விமல சேரபண்டார என்பவரே படுகொலை செய்யப்பட்டவராவார். (ந-4)

# வன்செயல்களால் பாதிப்புற்ற பெண்களின் அபிவிருத்திக்கு உதவ அமைப்புகள் அவசியம்

உலக நாடுகளில் தற்போது பெண்களுக்கான பல அமைப்புக்கள் தோன்றி அவர்களின் அபிவிருத்தி பற்றி பல நடவடிக்கைகளையும் தீர்மானங்களையும் எடுத்து வருகின்றன. ஐக்கிய நாடுகள் சபையில் பெண்களின் அபிவிருத்தி பற்றி பல விடயங்கள் ஆராயப்படுகின்றன. அதுடன் சர்வதேசரீதியில் மகளிர் மகாநாடுகளை நடத்துவதன் மூலமும் பல தீர்மானங்களை எடுத்து வருகிறது. மகளிரின் முக்கியத்துவத்தை உணர்ந்து ஐக்கிய நாடுகள் சபை மகளிர் ஆண்டைப் பிரகடனப்படுத்தியது.

### குடும்பத்தலைவி

இலங்கையைப் பொறுத்தவரை தற்காலத்தில் நிலவுகின்ற அரசியல் சூழ்நிலை காரணமாக பெண்கள பல பிரச்சினைகளை எதிர் நோக்கியுள்ளனர். அத்துடன் 59சதவீதமான குடும்பங்கள் பெண்களைத்தலைவியாக கொண்டிருப்பவையாக உள்ளன இவர்கள் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்கின்ற குடும்பங்களின் அங்கத்தவர்கள் எண்ணிக்கையும் கூடுதலானதாக உள்ளதாகவும் ஆய்வுகள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது.

இவ்வாறு பெண்கள் குடும்பத்தின் தலைமையை ஏற்பதற்கு அல்லது குடும்ப நிலைமை அவர்கள்மேல்சுமத்தப்படுவதற்கு பல காரணிகள் ஏதுவாக அமைகின்றன: வடக்கு-கிழக்கு மாகாணங்களை எடுத்துக் கொண்டால் வன் செயல்களினால்கணவன் இறத்தல் காணாமல் போதல், கைதுசெய்தல்நீண்டகாலம் தடுத்து வைத்தல், அங்கவீனமாதல், இயற்கை மரணம் மற்றும் வெளிநாட்டுக்கு வேலைவாய்ப்புத் தேடிச்செல்லுதல், வெளியூர்களில்வேலை செய்தல் முதலிய காரணிகளாலும் பல குடும்பங்களின் தலைமையை பெண்கள் சுமக்க வேண்டியுள்ளது குறிப்பாக கலாசார சீரழிவுகளினாலும் மாறிவரும்மனப்பாங்குகளினாலும் பிரிந்து வாழும் குடும்பங்கள், பெற்றோரை, உழைக்கும் வலுவுள்ளவர்களை இழந்த குடும்பங்களில் பெண்களே குடும்பத் தலைவியாக மாறிவருகின்றனர்.

### ஆயுட்காலம்

வெளிநாட்டுக்கு ஆண்கள் வேலை தேடிச் செல்லுதல் மற்றும் வன் செயல்கள் யுத்தங்களில் இறத்தல் முதலிய காரணிகளால் ஆண்களின் எண்ணிக்கை குறைந்து

**நா. இராஜமலர்**

செல்கின்றது. பெண்களின் ஆயுட்காலமும் ஆண்களை விட 4-5 வருடங்கள் அதிகமாகவே உள்ளன. ஆண் ஆயுட்காலம் 72 வயது வரையும் பெண்களின் ஆயுட்காலம் 76 வயதுவரையும் உள்ளது என்று அண்மைக்கால ஆய்வுகள் தெளிவுபடுத்துகின்றன.

1960-70களில் யாழ்ப்பாணத்தில் ஆண்களுக்குரிய தலைமைத்துவ சந்தாப்பங்கள் அதிகமாகவே இருந்தன. 1980களின் பின் பல்வேறு காரணிகளின் தாக்கங்கள் செல்வாக்குச் செலுத்த குடும்பங்களின் தலைமை பெண்களின்கைக்கு மாறியுள்ளது. அதுவும் 30-59 வயதுக்குள் உள்ளபெண்களே குடும்பத் தலைமை ஏற்கும் குடும்பங்கள் அதிகமாகவும் உள்ளன. இவ்வாறு இடைப்பட்ட வயதில் அவர்கள்தனது பிள்ளைகளை, பெற்றோரை, சில சந்தர்ப்பங்களில் கணவரை பராமரித்தல் அவர்களுக்கான இதர பணிவிடைகளுடன் குடும்பத்திற்கான பொருளாதாரத்தை ஈட்டிக் கொள்ள வேண்டிய இரட்டைச் சுமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். அத்துடன்சமுதாய [illegible]களுக்குள் சிக்கித்தவிக்கின்ற அவல நிலையும் ஏற்பட்டுள்ளது.

### கலாசார சீரழிவு

இடம் பெயர்வுகளால் முகாம் வாழ்வு, குடும்பத் தலைவன் வெளிநாடு செல்லுதல், நவநாகரிகமோகம் முதலிய தற்கால நடை முறை சிக்கல்களினாலும் கலாசாரச் சீரழிவுகள் ஏற்பட்டு இளம் சமுதாயத்தைப் பாதித்துவருகின்றன. உதாரணமாக 18 வயதின் பின்பு அமைந்த திருமண வயது தற்போது 14-15 வயதிற்கு மாறி வருவதால் 2-3 பிள்ளைகளுக்கு தாயாகி வாழும் நிலையும், மனப்பக்குவமற்ற வயதில் திருமணம் செய்வதனாலும் திருமண முறிவுகளாலும் மற்றும் ஒருவர் வெவ்வேறு இடங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களைத்திருமணம் செய்து அப்பெண்களின் வாழ்வை அவல நிலைக்கு தள்ளுவதும் இடப்பெயர்வுகளின் மூலமான முகாம் வாழ்வில் இன்று அதிகமாக நிகழ்கின்றது. இதனை நாம் அன்றாடம நீதிமன்றங்களில் நடக்கும் 'தாபரிப்பு' வழக்குகளில் இருந்து அறிந்து கொள்கிறோம

இவ்வாறான எல்லாவற்றையும் மாற்றி அமைத்து ஒரு புத்திஜீவியான சமுதாயத்தை உருவாக்கவேண்டியது மிகவும் முக்கியமான ஒன்றானதேவையாக இன்று உள்ளது. பெண்கள மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தத் தவறும் பட்சத்தில் எமது எதிர்கால சமுதாயமானது ஒரு கட்டுக்கோப்பற்ற கலாசாரசீரழிவுகளைக் கொண்ட ஒரு தான்தோன்றித்தனமான புத்திஜீவியற்ற ஒரு சமுதாயமாகவே திகழும் என்பது மறுக்கமுடியாத உண்மையாக மாறிவிடும்.

### அமைப்புகள் மூலம்

எனவே இவற்றை எல்லாம் மாற்றி அமைத்து எதிர்கால சந்ததியை வளமுள்ள தூர நோக்குள்ள ஆரோக்கியமான நற்சிந்தனையுள்ள சமுதாயம் ஒன்றை உருவாக்க நிறுவன ரீதியான அமைப்புக்கள் மூலம் ஒன்றுபட்டு தமது மேம்பாட்டுக்கான இலக்கை அடைய முயற்சிக்க வேண்டியது இன்றைய பெண்களின் பாரிய பொறுப்பாகும்.

சர்வதேச ரீதியாக பெண்களுக்கான அமைப்புகளை நிறுவி ஒன்றுபட்டு செயற்படுவதன் மூலம் பல்வேறுபட்ட நெருக்கீடுகளுக்கிடையில் சிக்கித் தவித்து மாண்டுபோகாது அவர்களைகாத்து அபிவிருத்தி அடைய செய்ய வேண்டும். அத்துடன் தான் ஏற்றுக் கொண்ட பணியை சிறப்பாகச் செய்வதற்காக அவர்களுக்கான கல்வி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல். மற்றும் தலைமைத்துவப் பண்புகளையும் வளர்த்தெடுப்பதன் மூலம் அவர்களின் அபிவிருத்திக்கான வாய்ப்புகளை இனங்காண முடியும். மிகவும் முக்கியமாக அவர்களின் பொருளாதார வளத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு சிறந்த திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தும் போதுதான் மிகவும் வினைத்திறனான பயனைப் பெற முடியும் என்பதில் ஐயம் இல்லை. □

## ராஜீவ் காந்தியை தாக்கிய வரும் தேர்தல் பிரசாரம்

[கொழும்பு]

இந்தியாவின் முன்னாள்பிரதமர் ராஜீவ் காந்தி 1987ஆம் ஆண்டு கொழும்புக்கு வருகை தந்த சமயம் அணிவகுப்பின் போது அவரைத் தாக்க முனைந்த கடற்படை வீரரான விஜித முனிறோகணடி சில்வா பொ ஐ முன்னணிக்காகதேர்தல் பிரசாரம் செய்யப்போவதாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த தேர்தலில் சிஹல உறுமய கட்சி சார்பில் இவர் போட்டியிட்டு படுதோல்வி அடைந்தார் இதுவரை காலமும் சிஹல உறுமய கட்சியில் சேர்ந்திருந்ததாகவும் ஐ தே. கட்சி விடுதலைப்புலிகளை கூட்டுச் சேர்வால் நாடு பிளவுபடுவதைக் காப்பாற்றும் பொருட்டு பொ ஐ முன்னணியில் சேர்ந்து தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடப் போவதாகவும் மேலும் தெரிவித்துள்ளார். [எ]

## கசிப்பு கடத்த அங்கவீனர்

[கோப்பாய்]

கோப்பாய்ப் பகுதி ஊடாக கசிப்பை எடுத்துச் செல்லும் நடவடிக்கையில் கசிப்பு உற்பத்தியாளர்களும், விற்பனையாளர்களும் அங்கவீனர்களைப் பயனபடுத்துவதாகத் தெரியவந்துள்ளது.

இதனால் இப்பகுதி விழிப்புக்குழுவினர் அங்கவீனர்கள் மீது விழிப்பாகக் கவனம் செலுத்திவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்தவாரம் அங்கவீனர் ஒருவர் கசிப்பை எடுத்துச் செல்லும் போதுகையும் மெய்யுமாகப் பிடிபட்டாராம் ஒன்றரை லீற்றர் கொண்ட பத்து போத்தல் கசிப்பை வெற்றிகரமாக எடுத்துச் சென்று உரிய இடத்தில் கொடுத்தால் 300 ரூபா தனக்கு வழங்கப்படும் என்று அச்சமயம் அவர் தெரிவித்தாராம். எ-79)

# ரணில் நான்கு பரிசுப்பொருட்களை பிரபாகரனுக்கு வழங்கப்போகிறார்

## விமல் வீரவன்ச இப்படியொரு பிரசாரம்

(கொழும்பு)

தேர்தலுக்குப் பின்னர் ரணில் விக்கிரமசிங்கா விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனுக்கு நான்கு பரிசுப் பொருட்களை வழங்கப் போகிறார் என்று ஜே. வி. யின் பிரசாரச் செயலாளர் விமல்வீரவன்ச கடந்த வெள்ளிக்கிழமை பொரளையில் நடைபெற்ற ஜே. வி. பியின் கொழும்பு மாவட்ட முதலாவது தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குவது, வடக்கு கிழக்கிலிருந்து இராணுவத்தை வாபஸ்செய்வது, நாட்டில் சமஷ்டி ஆட்சி முறையைஏற்படுத்துதல், இனரீதியாக மக்களைப் பிரித்தல் இவைகளே ரணில் வழங்கவுள்ள பரிசுகள என்று குறிப்பிட்ட விமல்வீரவன்ச தொடர்ந்து பேசுகையில்;

இன்று கூட்டுச்சேர்ந்துள்ள தமிழ்க் கட்சிகளுடன் ஐ. தே. க. கூட்டுச்சேர்ந்து நாட்டைப் பிரிப்பதற்கு இரகசிய ஒப்பந்தம்செய்துள்ளது. இந்தப் பொதுத்தேர்தலில் யானை-புலி கூட்டுக்கு வாக்களித்தால் நாடு பிரபாகரன் கைக்குப் போய்விடும், எனவே இதுகுறித்து மக்கள் சிந்திக்கவேண்டும்.

பொதுஜன ஐக்கியமுன்னணியும் 7 வருடங்களாக நாட்டைச் சீரழித்து இன்று தோற்கடிக்கப்பட்ட பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது. இந்நிலையில் நாட்டை ஆள்வதற்கும் மக்களைச்சமாதான வாழ்வுக்கு அழைத்துச் செல்வதற்கும் தகுதியான ஒரேகட்சி ஜே வி. பி. தான்.

1977 ஆம் ஆண்டு ஆட்சியைக் கைப்பற்றிய ஐ தே. கட்சி நாட்டிற்கு திறந்த பொருளாதாரக் கொள்கையை அறிமுகப் படுத்தியது இதன்மூலம வடக்கு விவசாயிகளின் வயிற்றில் அடித்தது.

யாழ்ப்பாண நூல் நிலையத்தைக் கொளுத்தியது மாவட்டசபை தேர்தலில் மோசடிகளைச் செய்தது. 1983 இல் தமிழ் மக்களைக் கொன்றுகுவித்து கறுப்பு ஜூலையை ஏற்படுத்தியது. இத்தகைய நடவடிக்கைகளால் தமிழ்மக்கள் தமது பாதுகாவலனாக பிரபாகரனை நாடுவதற்கு வழி வகுத்துக் கொடுக்கப்பட்டது.

அரசுடன் நாம் செய்து கொண்ட உடன்படிக்கையால் நாட்டிற்கு 35 நாட்களுக்குள் பல நன்மைகளைப் பெற்றுக்கொடுத்தோம். மேலும ஒருவருடம் தொடர்ந்திருந்தால் சுதந்திரமான, சுயாதீனமான தேர்தலை நடத்த வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். வங்கிக்கடனை மீளப்பெற முனைந்ததும் குழம்பிப் போன வர்த்தகர்கள் ஐ.தே. கட்சிக்குப் பணத்தைக் கொடுத்து தேர்தலை நடத்த வேண்டிய சூழ்நிலைக்கு அரசாங்கத்தைத தள்ளினர்.

ரவூப் ஹக்கீம், ஆறுமுகம் தொண்டமான் போன்ற இனவாதிகளுக்கும் கப்பம் வாங்குவோருக்கும் இடமளிக்கக் கூடாது சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் பிளவுபடாது ஒற்றை ஆட்சியின் கீழ் ஒற்றுமையாக வாழும் நிலைமையை நாம் ஏற்படுத்துவோம். ஈழக் கோரிக்கையைக் கைவிட்டு விடுதலைப்புலிகள் எம்மோடு பேச வந்தால் பேசுவோம். இல்லாவிட்டால் யுத்தம் செய்து பயங்கரவாதத்தை ஒழிக்கவும் ஜே வி. பி. தயங்காது என்று தெரிவித்தார். (எ)

# புளொட் உறுப்பினர்கள் படுகொலைச் சம்பவம் தமிழ் கட்சிகளே பொறுப்பு

## அறிக்கையில் தெரிவிப்பு

[வவுனியா]

வவுனியா பூந்தோட்டம் என்னும்பகுதியில்கடந்த2ஆம் திகதி புளொட் உறுப்பினர்களான தோழர் கந்தன், தோழர் பிரதாப் ஆகியோர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பே தார்மீகப் பொறுப்பு ஏற்க வேண்டும்.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் இது தொடர்பாக விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது

அந்த அறிக்கையில் மேலும தெரிவிக்கப்படடுள்ளதாவது;

தமிழ் கூட்டமைப்புக் கட்சிகளில் நாலில் ஒன்று நாகர் இலுப்பைக்குளத்தில் உள்ள மின் மாற்றிக்கும் மற்றைய ஓர் கட்சி தோணிக்கல், குருமன்காடு. மின் மாற்றிகளுக்கும் பாதுகாப்பு கொடுப்பது போல் எமது கட்சியும் பூந்தோட்டம் மின்மாற்றிககு பாதுகாப்பு கொடுத்து வருகின்றமை வவுனியா மக்கள் அறிந்ததே.

இந்தக் கடமையில் ஈடுபடுவதற்காக சென்றபோதேஇரு தோழர்களும் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இக் கொலைகளை தமிழ் கூட்டமைப்பைச் சேர்ந்தஒரு கட்சியே செய்துள்ளதுஎன்பதற்கான சரியான ஆதாரங்களும் பொது மக்களிடமிருந்து கண்கண்ட சாட்சிகளும் கிடைத்துள்ளன. இதன் காரணமாக அக்கட்சியின் உறுப்பினர் ஒருவரை எமது அலுவலகத்திற்கு அழைத்துவந்து கேட்டபோது அவரும் இக்கொலைக்கு சம்பந்தமான உண்மைகளை எமக்குகூறியுள்ளார்: பின்பு அவ்வுறுப்பினரைபொலிஸசரிடம் கையளித்துள்ளோம்.

இவ்வாறு அவ் அறிக்கையில் ([illegible])தெரிவிக்கப்பட்டுள்ளது. ([illegible])

# பாடசாலையில் மோதல் பொதுமக்கள் விசனம்

(கொழும்பு)

பண்டாரவளையில் தமிழ் பாடசாலை ஒன்றில் க.பொ.த. (உயர்தர) மாணவர்கள் மத்தியில் தொடர்ந்து மோதல் இடம் பெற்று வருவது குறித்து அப்பகுதி வாழ் பொதுமக்கள பெரிதும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

பாடசாலைக்கும் நிர்வாகத்திற்கும்அடிபணியாத மாணவர்கள் சிலரே மோதலிற்கு சூத்திர தாரிகளாக விளங்குவதாகவும்தெரிவிக்கப்படுகிறது.

இதுவிடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரியநடவடிக்கை மேற் கொள்வது அவசியம் என்றும் பெற்றோர் தரப்பில் மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## தற்காலிக அனுமதிப் பத்திரம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மேட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தினால், தற்காலிக மோட்டார் வாகன ஒட்டுநர் அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் பணி இடம் பெற்று வருகின்றது.

இப்பத்திரம் ஒரு வருடத்திற்குசெல்லுபடியாகும்என்பதும் குறிப்பிடத்தக்கது.

(உ-2)

# மட்டக்களப்பில் நாளை ஹர்த்தால்

# தமிழ்க் கட்சிகள் கூட்டாக ஏற்பாடு

## தமிழ்க் கிராமங்களை பிரிப்பதற்கு எதிர்ப்பு

(மட்டக்களப்பு)

வாகரைப் பிரதேசத்திலுள்ள தமிழ்க் கிராமங்களைப் பிரித்து ''கோறளை மத்தி'' என்ற புதிய முஸ்லிம் பிரதேச செயலகம் நிறுவும் முயற்சியைக் கைவிடுமாறு கோரி நாளை மட்டக்களப்பில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்சப்படவுளளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்க்காங்கிரஸ், ரெலோ மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ் (சுரேஸ் அணி) ஆகிய கட்சிகள் இணைந்தே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளன.

வாகரைப்பிரதேசத்திலுள்ள ஆலங்குளம், கிரிமிச்சை, மதுரங்குளம் போன்ற பாரம்பரிய தமிழ்க் கிராமங்களைப் பிரித்து ஏனைய முஸ்லிம் கிராமங்களுடன் இணைக்கும் முயற்சிக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதை அடுத்தே இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக பூரண ஹர்த்தாலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முஸ்லிம்களுக்கென பிரதேச செயலகம் அமைக்கப்படுவதை எதிர்க்கவில்லை. 90 சதுர கிலோமீற்றர் பரப்பளவான தமிழர் பிரதேசம் துண்டாடப்படுவதையே நாம் எதிர்க்கிறோம். எனவே இக் ஹர்த்தாலுக்கு தமிழ் மக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-5)

# விளையாட்டு செய்திகள்

## கூடைப்பந்தாட்ட இறுதிச் சுற்றில் ஜொனியன்ஸ், பட்டர்பிளை அணிகள் சம்பியனாகின

(வல்வெட்டித்துறை)

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் கூடைப்பந்தாட்ட கழகங்களுக்கிடையில் நடத்திய 21 வயதிற்குட்பட்டோருக்கான சுற்றுப்போட்டியில் ஆண்கள் பிரிவில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகமும், பெண்கள் பிரிவில் பட்டர் பிளை விளையாட்டுக் கழகமும் சம்பியன் ஆகின.

இச் சுற்றுப் போட்டியில் தொடர் ஆட்ட நாயகர்களாக பெண்கள் பிரிவில் ரி நர்மிதா ஆண்கள் பிரிவில் டி குகராஜ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (செ-217)

## மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் நொதேர்ன் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'பராபரம்' வெற்றிக் கிண்ணத்திற்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று மோதவுள்ள அணிகளின் விபரம் வருமாறு;

பி.ப 3.30 மணிக்கு, கிராஸ் ஹொப்பர் விளையாட்டுக் கழகமும், பசன் விளையாட்டுக் கழகமும்;

பி.ப. 5.00 மணிக்கு நொதேர்ன் நீலம் விளையாட்டுக் கழகமும், காளிகோயில் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

இப் போட்டிகள் செங்குந்தா இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன. (செ)

# அறிவும் பண்பும் நிரம்பியவர்களை பாராளுமன்றில் காண்பது அரிது

## சிசில் பெரேரா கவலை

(தென்மராட்சி)

பாராளுமன்றில் அறிவும், பண்பும், தலைமைத்துவ இயல்பும் பொருந்தியவர்களைக் காண்பது இன்றுவெகு அரிதாகவே உள்ளது.

செடேக் நிறுவன தேசிய உயிர்ப்பூட்டல் திட்ட இணைப்பாளரான சிசில் பெரேரா யாழ். விஜயத்தை முடித்துக்கொண்டு கொழும்பு திரும்பமுன்னர் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அறிவும், ஆற்றலும், அனுபவமும் மக்களுக்கு முன்மாதிரியாகத் திகழக்கூடியவர்களையே மக்கள் தமது பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்ய வேண்டும். மக்கள் பிரதிநிதிகள்எனக் கொள்ளப்படுபவர்கள் எல்லோருக்கும் முன்மாதிரியாக செயல்பட வேண்டியவர்களாவர்.

முன்னைய காலங்களில் பாராளுமன்ற நடைமுறைகளைப் பார்ப்பதற்காக பாடசாலை மாணவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். அப்போது பாராளுமன்றத்தில் மக்கள் பிரதிநிதிகளாக இருந்தவர்கள் மிகவும் கண்ணியத்துடனும், நேர்மையுடனும் செயற்பட்டவர்கள். அத்தகையவர்களால் பாராளுமன்றம் சிறப்படைந்தது.

ஆனால் இன்று பாராளுமன்றத்தைப் பார்க்கும்போது எம்மை அறியாமலே எமக்கு வேதனை ஏற்படுகின்றது.

எங்கும் எதிலும் ஒழுக்க வரம்புகள் மீறிய வார்த்தைகளும் அருவருக்கத்தக்க செயல்களும் மனித நாகரிகத்தை இழக்கச் செய்துவிடுகின்றதுஎன இணைப்பாளர் சசில் பெரேரா குறிப்பிட்டார். (க-77)

## மூவர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாகர் கோவில் பகுதியில் ரோந்து நடவடிக்கையில ஈடுபட்ட படையினர் அங்கு எதிர்ப்பட்ட புலிகள் இயக்க உறுப்பினர்களுடன் துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்ட வேளை, புலிகள் தரப்பில் மூவர் உயிரிழந்ததாக விசேட ஊடகத் தகவல் மையம் அறிவித்துள்ளது. (உ)

## இராசி பலன்

(5-11-2001)

ஐப்பசி 19, திங்கள்
சதுர்த்தி மு.ப 10.52
மிருகசீரிடம் மு.ப 10.45
இராகுகாலம் 7.34-9.04
சுபநேரம் 12.04-1:34
ஆமிர்தசித்தம்

**மேடம்**

நினைத்த காரியம் கைகூடும், கூட்டு முயற்சி, வாக்கு மேன்மை, சகோதரர் உதவி.

**இடபம்**

காரிய சித்தி, தொழில் விருத்தி, எதிர்பாராத மனஸ்தாபம், சுபகாரியம்.

**மிதுனம்**

புதிய முயற்சி, உடல் நலம், கீர்த்தி, முயற்சி கைகூடும்,

**கடகம்**

மனக்கிலேசம், வீண் கோபம், பிரயாணம், காரிய தாமதம்.

**சிங்கம்**

மன மகிழ்ச்சி, காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை, உறவினர் வருகை.

**கன்னி**

தொழில் முன்னேற்றம், பணியாளர் உதவி, தூர தேச செய்தி, காரிய நன்மை.

**துலாம்**

விருந்தினர் சந்திப்பு, தொழில் சிந்தை, மனச் சஞ்சலம், முயற்சி தாமதம்;

**விருச்சிகம்**

எதிர்பாராத பிரச்சினை, சிறுவியாதி, காரிய தடங்கல், வாகன பயம்.

**தனுசு**

முயற்சி நிறைவேறும், நல்ல வரவேற்பு, நண்பர்கள் உதவி, தனலாபம்.

**மகரம்**

தொழில் விருத்தி, சந்தோஷமான சம்பவம், சத்துரு ஜெயம், காரிய அனுகூலம்.

**கும்பம்**

முயற்சி மந்தம், கௌரவக் குறைவு, தொழில் சிறப்பு, மனப்பதட்டம்.

**மீனம்**

தாய்வழி உறவு, ரோக பயம், பெரியோர் மனஸ்தாபம், காரியதாமதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## உறுப்பினர் வெளியேற்றம் பொ.ஐ. முன்னணிக்கு பாதிப்பு இல்லையாம்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் நந்த மித்ர எக்கநாயக்கா ஐக்கிய தேசியக்கட்சியில்சேர்ந்ததால் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படமாட்டாது என அக்கட்சியின் முதன்மை வேட்பாளர் தெரிவித்துள்ளார்.

மாறாகக்கட்சியின்தாய்மைப் பண்பு பேணுவதற்கு இவ் வெளியேற்றம் பெரிதும் உதவும என்றும தெரிவித்தார். [க]

## திருமலையில் தமிழனின் கறைபடிந்த வரலாறு துடைக்கப்பட வேண்டும்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் தமிழனின் கறைபடிந்த வரலாறறைத் துடைத்தெறியும் தேர்தலாக எதிர்வரும தேர்தல் அமைய வேண்டும் என்று தமிழ்க் கட்சிக் கூட்டமைப்புவேட்பாளர் பட்டியலில் இரண்டாவதாக இடமபெற்றுள்ள கதிர்காமத்தம்பி துரைரட்ணசிங்கம் தெரிவித்துளளார்.

முதன்மை வேட்பாளரான இரா. சம்பந்தனின் இல்லத்தில் நடந்த கூட்டமைப்பு ஆதரவாளர் கூட்டத்தில் பேசும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

கடந்த தேர்தலில் திருமலையில் இழந்த தமிழர் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை மீண்டும் பெறவேண்டும். கடந்த தேர்தலில் எம்மத்தியில் பேரினவாத ஊடுருவலுக்கு இடமளிக்கப்பட்டது. இதை நாம் மீண்டும் அனுமதிக்கக்கூடாது. மாற்றானின் மனதைத் புண்படுத்தாது செயற்படவேண்டும் என்று தொடர்ந்து பேசுகையில்அவர் குறிப்பிட்டார். (எ)

## சங்கக்கிளையில் திருட்டு

(காரைநகர்)

காரை நகர் ப.நோ.கூ.சங்கத்தின்5ஆம் இலக்க கிளை கடந்த 31ஆம் திகதிஇரவு ஒடு பிரித்துப் பெறுமதி வாய்நத பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

கிளைக் காவலாளியின் கடமை நேரத்திலேயே இத திருட்டு துணிகரமாக நடந்தேறியுள்ளது

திருடர் ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதி வாய்ந்தபால் மாவகைகள், சீனிசவர்க்காரம் முதலிய பொருட்களை எடுத்துக்சென்றுள்ளனர்.

இத்திருட்டு குறித்து ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-238)

## ஜனவரி மாதம் சார்க் உச்சிமாநாடு

(கொழும்பு)

பதினொராவது சார்க்உச்சி மாநாடு வரும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ளது.

இம் மாநாடு டிசம்பர் மாதம் 30 ஆம் திகதி நேபாளத் தலைநகர் காட்மண்டுவில் நடைபெறவிருந்தது, இந்திய பாகிஸ்தானிய பிரச்சினைகள் காரணமாகவே இம் மாநாடு பிற்போடப்பட்டு வந்தது.

சார்க் அமைப்பின்தலைமைப் பொறுப்பை நீண்டகாலமாக இலங்கை வகித்து வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (செ)

## கொடுப்பனவு விரைவில்

(மானிப்பாய்)

கடல்வளத்தைப் பாதுகாக்கும் பொருட்டு தெரிவு செய்யப்பட்டுபயிற்சிஅளிக்கப்பட்டு வரும் கடல்வள அபிவிருத்தித் தொண்டர்களுக்கான கொடுப்பனவுகள மிக விரைவில் வழங்கப்படவுள்ளதாக சமபந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நாவாந்துறை சென்மேரிஸ் சனசமூக நிலையக்கட்டிடத்தில் மேற்படி தொண்டர்களுக்கு பயிற்சி இடம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது, (க-232)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

(தொடர்ச்சி)

ஒக்டோபர் மாதம் 02ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றன.

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 217838 ஏ | 217838 பி |
| 217845 ஏ | 217846 ஏ |
| 217861 ஏ | 217861 பி |
| 217861 சி | 217862 ஏ |
| 217862 பி | 217862 சி |
| 217862 டி | 217865 ஏ |
| 217870 ஏ | 217874 ஏ |
| 217875 ஏ | 217876 ஏ |
| 217876 பி | 217880 ஏ |
| 217880 பி | 217880 சி |
| 217902 ஏ | 217905 ஏ |
| 217911 ஏ | 217912 ஏ |
| 217917 ஏ | 217917 பி |
| 217923 ஏ | 217924 ஏ |
| 217926 ஏ | 217926 பி |
| 217931 ஏ | 217933 ஏ |
| 217934 ஏ | 217936 ஏ |
| 217936 பி | 217937 ஏ |
| 217938 ஏ | 217956 ஏ |
| 217956 பி | 217962 ஏ |
| 227962 பி | 217966 ஏ |
| 217967 ஏ | 217968 ஏ |
| 217972 ஏ | 217975 ஏ |
| 217975 பி | 217976 ஏ |
| 217976 பி | 217976 சி |
| 217976 டி | 217987 ஏ |
| 217987 பி | 217987 சி |
| 217992 ஏ | 217993 ஏ |
| 218000 ஏ | 218003 ஏ |
| 218004 ஏ | 218012 ஏ |
| 218025 ஏ | 218026 ஏ |
| 218036 ஏ | 218050 ஏ |
| 218050 பி | 218050 சி |
| 218050 டி | 218050 ஈ |
| 218050 எப் | 218050 ஜி |
| 218051 ஏ | 218051 பி |
| 218051 சி | 218051 டி |
| 218051 ஈ | 218051 எப் |
| 218051 ஜி | 218051 எச் |
| 218051 ஐ | 218058 ஏ |
| 218060 ஏ | 218061 ஏ |
| 218066 ஏ | 218077 ஏ |
| 218078 ஏ | 218079 ஏ |
| 218082 ஏ | 218091 ஏ |
| 218109 ஏ | 218111 ஏ |
| 218121 ஏ | 218134 ஏ |
| 218135 ஏ | 218136 ஏ |
| 218150 ஏ | |

### நல்லூர்

| | |
|---|---|
| 200676 ஏ | 200677 ஏ |
| 206601 ஏ | 207293 ஏ |
| 207293 பி | 207305 ஏ |
| 207305 பி | 208665 ஏ |
| 211208 ஏ | 213443 ஏ |
| | 213465 ஏ |
| 213465 பி | 213465 சி |
| 213566 ஏ | 213566 பி |
| 213566 சி | 215386 ஏ |
| 215386 பி | 215386 சி |
| 215386 டி | 215386 ஈ |
| 215513 ஏ | 215641 ஏ |
| 215659 ஏ | 215659 பி |
| 215659 சி | |

(தொடரும்)

## ❀ இன்று ஒரு தகவல் ❀

# திட்டமிட்டபடி நடவுங்கள்

முன்னேற வேண்டும் என்ற குறிக்கோள் உள்ளவர்கள் காலத்தை தவறவிடமாட்டார்கள் அத்துடன் வீண் விரயமும் செய்ய மாட்டார்கள். காலமானது கன வேகத்தில் பறந்து சென்று கொண்டிருப்பதை நாம் அறிவோம். கடந்து போகின்ற காலங்கள் மீளவும் திரும்புவதில்லை. எமது ஒவ்வொரு செயற்பாடுகளையும் மிகவும் சிறந்த முறையில் திட்டமிட்டே செய்ய வேண்டும்.

பூரணமான முறையில் திட்டமிட்டு செயலாற்றும் எந்தக் காரியமும் தவிடுபொடியானதாகச் சரித்திரம் இல்லை. அவ்வாறு தவறு ஏதாவது நேர்ந்துவிட்டிருப்பின் அதற்கு நாம் போடும் திட்டத்தில் விழுந்த ஓட்டைதான் காரணம் என்றே கொள்ளவேண்டும்.

சிறந்த முறையில் திட்டமிட்டு செயலாற்றி முடித்து வெற்றிபெறுவதில் மௌண்ட்பாட்டன் பிரபு பேர் பெற்றவர். அவர் மேற்கொள்ளும் எந்த இராணுவ நடவடிக்கையாக இருந்தாலும் எல்லா அலுவல்களும் சரியான முறையில இருக்கின்றனவா என்று அவர் மேற்பார்வை செய்வார். இது அவரது படை நடவடிக்கைகளில் வழக்கமான செயற்பாடாக அமைந்தது.

இவ்வாறு சிறந்த முறையில திட்டமிட்டு தனது நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தார். மௌண்ட்பாட்டன் பிரபு ஐரோப்பியக் கடற்கரையில் திடீரென்று இறங்கி எதிரி முகாம்களைத் தாக்கிவிட்டு திரும்பி வரும் பிரிட்டிஷ் கமாண்டோ படைகளுடைய தலைவராக அவர் இருக்கின்ற சமயங்களில் ஒவ்வொரு தாக்குதலுக்குப் பின்பும் அந்தந்த தாக்குதல்களில் ஏதாவது தவறுகள் உள்ளனவா என்று ஆராய்ந்து பார்ப்பது அவரது வழக்கமாக இருந்தது ஏனெனில் திரும்பவும் அதேபோன்ற தவறுகள் ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ள முடியும் என்பதற்காகவே ஆகும்.

சிறந்த முறையில் திட்டமிட்டு செயலாற்றிக் கொண்டிருந்த போது ஒரு நாள் நோர்வே துறைமுகமொன்றை தாக்கிவிட்டு தம்முடைய படைவீரர்களுடன் தமது நாட்டின் துறைமுகம் ஒன்றை நோக்கி விரைந்து வந்து கொண்டிருந்தார்.

கரையை அடைந்ததும் 2-3 வீரர்கள் கப்பலை விட்டு இறங்கிக் கொண்டிருந்தனர். ஏனையோரும் இறங்க தயாராகிவிட்டனர். இந்நிலையில் தனது திட்டத்தில் சிறு தவறு ஏற்பட்டுவிட்டதாக அவர் மனம் வருந்தினார். உடனே தனது படை வீரர்களை எல்லாம் ஒன்றாகக் கூட்டி அவர்களிடம் என்ன கூறினார் தெரியுமா?

''நாம் போட்ட திட்டத்தின்படி குறித்த நேரத்தில் காரியம் நடக்கத் தவறிவிட்டதே, 8 30 மணிக்கல்லவா நாம் கரையில் இறங்கத் திட்டமிட்டிருந்தோம். ஆனால் நம்முடைய முதல்வீரன் 8.31 மணிக்குத் தானே கரையில் இறங்கினான்'' என்று கூறினார்.

இது அவருக்கு பெரிய தவறாகத் தோன்றியது. அவர் கூறியது நமக்கு வேடிக்கையாகத் தெரியலாம். ஒரு நிமிடம் தாமதித்ததால் அப்படி என்ன தவறு நேர்ந்துவிட்டதாக வருந்தினார் என்று நினைப்போம். ஒரு கணம் தாமதித்தாலும் பாரியசேதங்களையும், பல உயிர்களுக்கு ஆபத்தையும் ஏற்படுத்தும் என்பதை அவர் நன்கு அறிந்து வைத்திருந்தார்.

ஒரு நிமிட தாமதத்திற்கே தான் திட்டமிட்டதில் ஏதோ தவறு நேர்ந்து விட்டதாக மௌண்ட்பாட்டன் பிரபு வருந்தினார். நம்மில் எத்தனை பேர் மங்கல நிகழ்வுகளில்கூட சுபநேரத்தையே தவறவிட்டு விடுகிறோம். □

என். ராஜி

# பொ. ஐ. ஐ. முன்னணியினர் ஐ. தே. க. மீது குற்றம் சுமத்தாது நாட்டிற்கு நன்மை செய்ய வேண்டும்

## ரணில் விக்கிரமசிங்க சாட்டையடி

(கொழும்பு)

குறித்த சில அரசியல் நோக்கங்களுக்காக ஐக்கிய தேசியக் கட்சியின் மீது குற்றம் சுமத்துவதை வழமையாக கொண்டுள்ள பொதுஜன ஐக்கிய முன்னணி அதனைத் தவிர்த்து நாட்டுக்கும் மக்களுக்கும் பயன்படக்கூடியவாறு ஏதாவது இருந்தால் அது பற்றித் தெரிவிக்க வேண்டும்' இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில்விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சியினருக்கும் தொடர்புகள் இருக்கிறதென தேர்தல் காலங்களில் மட்டும் பிரசாரங்களின் மூலம் மக்களைத் திசை திருப்பும் பொதுஜன ஐக்கிய முன்னணியினர் தேர்தல் முடிவடைந்ததும் விடுதலைப்புலிகளுடன் பேச ஐக்கியதேசியக் கட்சியிடம் ஆலோசனைகளைப் பெறுவது ஒவ்வொரு தேர்தல் முடிவிலும் நடைபெறும் நிகழ்வாகும்.

ஐக்கிய தேசியக் கட்சி விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்று சொல்வதில் எவ்வித உண்மையும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் பொதுஜன ஐக்கிய முன்னணியைப்போல்பொய்ப் பிரசாரங்களை ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் செய்யப்போவதில்லை, உண்மையான, நீதியான நடுநிலைமையான கருத்துக்களை வைத்தே நான் மக்கள் மதியில் அதிக வாக்குகளைப் பெறப்போகிறேன் என்றும் அவர்மேலும் தெரிவித்தார். (செ-7)

## ஜெப வாரம் ஆரம்பம்

(வல்வெட்டித்துறை)

கிறிஸ்தவ வாலிபர் சங்கம் கிறிஸ்தவ யுவதிகள் சங்கம் ஆகியவற்றால் உலகளாவிய ரீதியில் நடத்தப்படும் ஜெப வாரம் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகி 17ஆம் திகதி சனிக்கிழமைவரை இடம் பெறவுள்ளது.

அன்று ஞாயிறுமாலை 5.00 மணிக்கு சென்.ஜோன்ஸ். ஆலயத்தில் பூசைகள் இடம் பெறவுள்ளதும இங்கு குறிப்பிடத்தக்கது. (க-217)

## விளையாட்டு விழா

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை கூழாவடி தியாக சீலம் சிறுவர் பூங்கா முன்பள்ளி விளையாட்டு விழா இன்று திங்கட் கிழமை பி.ப.2.00மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆசிரியை திருமதி வி.பிரபாகரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவிற்கு வலி தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் வெ.அ.ஜோண்சன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். (செ-232)

## நத்தார் இன்னிசை விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டு பாடசாலைகள் ஒன்றிணைந்து நேற்று முன்தினம சென். ஜோன்ஸ்கல்லூரியில் 'நத்தார் இன்னிசை' விழாவைக்கொண்டாடின.

இந் நிகழ்வில் அருட்தந்தையர், அருட்சகோதரிகள் மற்றும் மாணவர்கள், பொது மக்களும் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் அருட் செய்தியை வணக்கத்திற்குரிய ஜே.ஜெபமோகன் அடிகளார் வழங்கினார். (உ-2)

## முத்தமிழ் விழா

(கோப்பாய்)

வலி கிழக்குப் பிரதேசத்திலுள்ள கலைஞர்களின் கலையுணர்வைப் பிரதிபலிக்கும் வகையில் இவ்வருட இறுதியில் இருநாட்கள் நடத்தப் படவுள்ள முத்தமிழ் விழா அமையும் என்று வலி கிழக்கு பிரதேச செயலர் கே. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற பேரவைக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் இவ்வாறு குறிப்பிட்ட அவர். 1999 ஆம் ஆண்டில் மேற்படி பகுதியில் மூன்று நாள் விழாவில் பல கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டார்.

இவ்வருட கலாசாரப் பேரவையின் தலைவராக பிரதேச செயலர் கே. கேதீஸ்வரனும், செயலாளராக கலாசார உத்தியோகத்தர் திருமதி எஸ்.மாலினியும் பொருளாளராக இராமலிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர். (எ-79)

## கட்சி விட்டு கட்சி தாவியவர்களுக்கு மக்கள் பாடம் புகட்டுவர்

(கொழும்பு)

''பணத்திற்கும் பதவிக்கும் ஆசைப்பட்டு கட்சி மாறியவர்களுக்கு நடைபெறப் போகும் தேர்தலில் மக்கள் சிறந்த பாடம் புகட்டுவார்கள்''.

இவ்வாறு துறைமுகங்கள் அபிவிருத்தி, கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

கடந்த பதினேழு வருடகாலங்களாக ஐக்கிய தேசியக் கட்சியினரின இருண்ட யுகத்திலிருந்த மக்கள் அதிலிருந்து விடுபட்டு ஒளிமயமான உலகில் பிரவேசிக்கும் சந்தர்ப்பம் 1994 ஆம் ஆண்டிலேயே கிடைத்தது.

பொதுஜன ஐக்கிய முன்னணியினரின் ஆட்சிக் காலத்திலேயே மக்கள் சகல ஜனநாயக சுதந்திரங்களையும் பெற்று அச்சமின்றி வாழ்ந்து வந்தனர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ)

## விரிவுரை மண்டபம் அமைப்பு

சாந்திகம் உளவளத்துணை நிலையத்தில் யூ என். எச். சி ஆர் நிதியுதவியுடன் உளவளத்துணையில் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு விரிவுரைகளை மேற்கொள்வதற்கான புதிய விரிவுரை மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. (க-217)

## தேர்தல் பிரசாரத்துக்கு இப்படியும் ஒரு யுக்தி

### ரணில் ஆரம்பிக்கிறார்

(கொழும்பு)

ஐக்கியதேசியக்கட்சித்தலைவா ரணில் விக்கிரமசிங்க தனதுதேர்தல் பிரசாரத்தை பேருந்து வண்டியில் ஆரம்பிக்கப் போவதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த விசேட பேருந்து சேவை நாடு முழுவதும் இடம் பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் இச்சேவை இடம்பெறுமென ஐக்கிய தேசிய கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கிராமங்கள் தோறும் இப்பேருந்து செல்லவுள்ளதாகவும் அப்பேருந்தில் ரணில்விக்கிரமசிங்கவும் சென்று 10 நிமிடம் வரை உரை நிகழ்த்துவார்என்றும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (க-04)

## யாழ். குடாநாட்டில் சோதனைகள் தீவரம்

(வல்வெட்டித்துறை)

டிசம்பர் மாதம் 5 ஆம் திகதி இடம பெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் யாழ். குடா நாட்டின் பல பகுதிகளிலும் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன.

யாழ். நகரும் அண்டிய பகுதிகளிலும் கூடுதலான இராணுவத்தினர் ரோந்துப் பணிகளில் ஈடுபட்டிருப்பதுடன் திடீர்வீதிப் பரிசோதனைகளும் அதிகரித்து வருகின்றன. அத்துடன் சோதனைச் சாவடிகளில் மிகவும் நுணுக்கமான முறையில் அடையாள அட்டைகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. (க-217)

## மூலிகை விஞ்ஞானம் கல்வித்திட்டத்தில் அவசியம்

### டாக்டர் சக்திவேல்

(யாழ்ப்பாணம்)

கல்விவளர்ச்சி அடைய வேண்டுமானால் மாணவர்களுக்கு உடல், மனஉறுதியும், ஆரோக்கியமும் அவசியம். ஏறத்தாழ 30 வீத மாணவர்கள் சத்துணவு இல்லாது பாதிக்கப்பட்டுள்ளனர். 65 வீத மாணவர்கள் பல், முரசு, தோலசார்ந்த வியாதிகளால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலயத்தில் மூலிகைகளும் சுகவாழ்வும், பற்றி அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றிய டாக்டர் வெற்றிவேல் சக்திவேல் கூறினார்.

வித்தியாலய அதிபர் இ. சோமேஸ்வரம் பிள்ளை தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கல்விகற்பதற்கு உடல் நிலைத்தகுதி மிகவும் அவசியமானது என்பதை மாணவர்களும் ஆசிரியர்களும் உணர்ந்து பாடசாலைக் கல்வித்திட்டத்தில் சுகநலக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் இவ்வகையில் பாடசாலை சுகநல விருத்திக்கு உதவத்தக்கவகையில் இலகுவில் கிடைக்கக் கூடியஎமது பிரதேசமூலவளங்களில் ஒன்றாகிய மூலிகை வளம் தொடர்பான மூலிகை விஞ்ஞானம் என்னும் பாடம் பாடசாலைக் கல்வித்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். பாடசாலைகளில் மூலிகைத் தோட்டங்களை அமைப்பதோடு. உயர்தரக் கல்வித்திட்டத்தில் அறிமுகப் படுத்தப்பட்ட தனிநபர், குழு நிலை ஆய்வுகளில் சுகவளம. மூலிகைவளம் தொடர்பான ஆய்வுகளை ஊக்குவிப்பதன் மூலம் சிறந்த ஆரோக்கியம் மிக்க சமுதாயத்தை உருவாக்கலாம் என்று குறிப்பிட்டார்.

அதிபர் சோமேஸ்வரம் பிள்ளை தமது தலைமை உரையில் சித்த மருத்துவர்களால பயன்படுத்தப்படும் மூலிகைகள் பக்கவிளைவுகள் இல்லாதவை உணவாகவும், மருந்தாகவும் மூலிகை வளத்தைப் பயன்படுத்திய நமது முன்னோர் நல்ல ஆரோக்கியத்துடன் நீண்டகாலம் வாழ்ந்தார்கள் என்று கூறினார். (எ)

## வீட்டுத்திட்டம்

சாவல்கட்டு கிராமத்தில் கடற்றொழில் நீர்வள அமைச்சினால் வீட்டுத்திட்டம் ஒன்று அமுல்படுத்தப்படவுள்ளது.

இதற்கான பயனாளிகள் தெரிவு தற்போது இடம் பெற்று வருகின்றது. (உ-201)

## சிந்தனைக்கு விருந்து

### உள்ளக் குளிர்வர் உவந்து

'எங்கள் குடும்பத் தலைவர் இறந்ததால்
பங்கம்' எனமுதலைக் கண்ணீரைப்- பொங்கவிடும்
பிள்ளைகள், 'இக்கிழடு போனதே நல்ல' தென
உள்ளம் குளிர்வர் உவந்து.

'பழையவன்'

## அமெரிக்க நீதிமன்று மீண்டும் செயற்பாடு

(வாஷிங்டன்)

அந்திரெக்ஸ் பீதி காரணமாக மூடப்பட்டிருந்த அமெரிக்க உயர் நீதி மன்றம் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

அந்திரெக்ஸ் தாக்கத்துக்கான அடையாளங்கள் எதுவும் பரிசோதனைகளில் கண்டு பிடிக்கப்படாததை அடுத்தே உயர் நீதிமன்றம் தனது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது:

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த நீதிமன்ற பெண் பேச்சாளர் கதி ஆர்பெக் நீதிமன்ற கட்டடத்தில் நடத்தப்பட்ட எல்லா மேலதிக சூழல் பரிசோதனைகளின் பெறுபேறுகளும் அந்திரெக்ஸ் தாக்கத்திற்கான முடிவுகளை வெளிப்படுத்தவில்லை என்றார். (க-05)

## இன விடுதலைக்கான புனிதப்போரில் அனைவரும் ஒன்றுபட வேண்டும்

(காபூல்)

ஒரு இனத்தின் விடுதலைக்காகவும் அடிமை மீட்பிற்காகவும் பெரும் சர்வாதிகாரத்திற்கு ஆப்பு வைக்கும் போராகவே அமெரிக்காவிற்கு எதிரான புனிதப் போர் அமைந்துள்ளது. எனவே அனைத்து முஸ்லிம்களும் இப்போரில் ஒன்றுபட வேண்டும் என ஒஸாமா பின்லேடன் அறைகூவல் விடுத்துள்ளார்.

ஆப்கானில் பின்லேடனின் தலைமையில் இயங்கி வரும் தொலைக்காட்சி ஒன்றிற்கு பேட்டியளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அப் பேட்டியில அவர் மேலும் கூறியதாவது; இப் புனிதப் போரில் முஸ்லிம்கள் ஐக்கியத்துடன் இணைந்து போராடுவதை, முஸ்லிம் மற்றும் அரேபியத் தலைவர்கள தடுத்து வருகின்றனர்.

இது ஒரு தனிப்பட்ட சுய கௌரவத்திற்கான போர் அல்ல, எனவே போரில் ஈடுபடும் முஸ்லிம்களை அவர்களின் தலைவர்கள் தடுத்து வருகின்றமை வேதனை தருகின்றது என ஒஸாமா தனது கவலையை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை ஒஸாமா தாக்கப்பட்டிருக்கலாம் என அமெரிக்கா, மற்றும் பிரிட்டன் தெரிவித்து நீண்ட காலங்களின்பின் ஒஸாமா தொலைக்காட்சிக்கு நேரடியாகப் பேட்டியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-7)

## ஜெயாவிற்கு கொலை மிரட்டல் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

(சென்னை)

தமிழக முன்னாள்முதல்வர் ஜெயலலிதாவை நீதிமன்ற வளாகத்துக்குள வைத்துக் கொலை செய்யப் போவதாக தமிழகத் தீவிரவாதக் குழு ஒன்று கொலை அச்சுறுத்தல விடுத்துள்ளது.

இதனையடுத்து ஜெயலலிதாவின் வீட்டைச் சுற்றிப் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பிரபல தீவிரவாத அமைப்பான தமிழ்நாடு விடுதலைச் சேனை என்ற அமைப்பே ஜெயலலிதாவிற்கு இந்த அச்சுறுத்தலை விடுத்துள்ளது.

தமிழ்நாடு வார இதழ் ஒன்று தனது மின்னஞ்சல் குறிப்பில் இந்த செய்தியை வெளியிட்டிருந்தது.

தமிழக முதல்வர் பதவியிலிருந்து ஜெயலலிதாவின் இராஜினாமாவும் அதனையடுத்து இடம்பெற்ற புதிய முதல்வர் பதவியேற்பு நிகழ்வும் ஜெயலலிதா மீது கொலை அச்சுறுத்தலிற்கு காரணமாக அமையலாமென தமிழக அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-து)

## வாஷிங்டன் போஸ்ட் செய்திக்கு அமெரிக்க தீவிரவாதிகள் மறுப்பு

(வாஷிங்டன்)

உலகையே அச்சுறுத்திவரும் அந்திரெக்ஸ் பக்றீரியா பரவுவதற்கு அமெரிக்காவின் உள்நாட்டு தீவிரவாதிகளே காரணம் என்று வெளியான செய்திகளை சில தீவிரவாத அமைப்புகள் மறுத்துள்ளன.

அமெரிக்க புலனாய்வு நிறுவனம் ஒன்றை மேற்கோள காட்டி வாஷிங்டன் போஸ்ட் என்ற பத்திரிகை, அந்திரெக்ஸ் கிருமிகளை உள்நாட்டு தீவிர அமைப்பினரே துகள்களாக கடிதம் மூலம் அனுப்பி வருவதாகவும் இதற்கு அமெரிக்கா மீதான விமானத தாக்குதலை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி அமெரிக்காவை ஆட்டிப் படைக்கிறார்கள் என்றும் செய்தி வெளியிட்டுள்ளது.

ஆனால் அச்செய்தியில் எவ்வித உண்மைத்தன்மையும் இல்லை என்றும் மேற்படி பத்திரிகை பின்லேடனின் ஆதரவில் இயங்கிவருவதால் அவருக்கு சாதகமான செய்திகளை வெளியிட்டு உள்நாட்டில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்துகிறது என்றும் சில தீவிரவாத அமைப்புகள் துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டுள்ளன.

இதனால் அரச மற்றும் தனியார் ஊடகங்களுக்கும் தீவிரவாத அமைப்பினருக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் நிலவிவருகின்றன.

இதன் பொருட்டு ஊடக நிலையங்களுக்கு பெரும் பொலிஸ் காவல் பலப்படுத்தப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (செ-7)

## தி. மு. க. - பா. ம. கட்சி கூட்டு நீடிக்கும்

### ராமதாஸ் நம்பிக்கை தெரிவிப்பு

(சென்னை)

பாட்டாளி மக்கள் கட்சிக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இடையில் கூட்டு நீடிக்கும் என்று பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் சென்னையில் கூடிய பாட்டாளி மக்கள் கட்சிசெயற்குழுக் கூட்டத்தில் டாக்டர் ராமதாஸ் மேலும் தெரிவிக்கையில்; தமிழகத்தில் அண்மையில் நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் தி.மு.க. விற்கு கூடுதல் வெற்றிகள் கிடைத்திருக்கின்றன என்று தெரிவித்தார்.

இதே வேளை கூட்டத்தில் மத்திய அரசு பயங்கரவாதத்துக்கு எதிராக மேற்கொண்ட சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. (க-து)

## உலக தரிசனம்

### மூவர் பலி

(புதுடில்லி)

இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் முஸ்லிம் பிரிவினைவாதிகள் நடத்தியதாக் குதலில் மூன்று படைவீரர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் இருவர் காயமடைந்துள்ளனர். (செ)

## மன்னாரில் யுவதி கைது விவகாரம் உடன் விசாரணை வேண்டும்

### ரெலோ முன்னாள் எம்.பி.கோரிக்கை

(மன்னார்)

மன்னாரில் உப்புக்குளம் பகுதியில் யுவதி ஒருவர்கைது செய்யப்பட்டமை தொடர்பாக பாரபட்சமற்ற வகையில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என ரெலோ அமைப்பின் தலைவரும், முன்னாள் எம் பியுமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஆணைக் குழுவிற்கு இது விடயம்தொடர்பாக கடிதம மூலம் தமது கண்டனததை தெரிவித்த அவர்மேலும்தெரிவிக்கையில்

மேற்படியுவதி கைது செய்யப்பட்டமைக்கான காரணம் எதுவும் ரகசியப் பொலிஸாரினால் தெரிவிக்கப்படவில்லை.

பெண்கள்கைது செய்யப்படும் போது கடைப்பிடிக்க வேண்டிய அந்தசட்ட நடைமுறையும் பின்பற்றப்படவில்லை.

இவரது கைது தொடர்பாக மேற்கொண்ட நடவடிக்கை குறித்துவிசாரணைகள் நடத்த வேண்டுமெனவும் சட்டத்தை மீறிநடந்த அதிகாரிகளுக்கு கடும் தண்டனை வழங்கப்பட வேண்டுமெனவும் அடைக்கலநாதன் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் பஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள தனியார் நிறுவனமொன்றில்கடமையில் இருந்த வேளையில் குறித்த யுவதி கைது செய்யப்பட்டமை ஏற்கனவே தெரிந்ததே. (க)

## பிரபாகரனை மகிழ்விக்க ஐ. தே. க. முயற்சிக்கிறது

### தேரர் கூறுகிறார்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி எதிர்வரும் தேர்தலுக்காக தனது சகல நடவடிக்கைகள் மூலமும பிரபாகரனை மகிழ்விக்கும முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது. ஏனெனில் இத்தேர்தலைத்தீர்மானிப்பவராக விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் செயற்படுகின்றார்,

இவ்வாறு பயங்கரவாத எதிர்ப்பு தேசிய இயக்கத்தின் அமைப்பாளர் ஹெடிகல்லே விமலசார தேரர் அண்மையில் வெள்ளவத்தையில் பத்திரிகையாளர் மாநாடொன்றில் பேசுகையில் கூறினார்.

பொ. ஐ. முன்னணியில் ஏற்பட்ட வெறுப்பினால ஐ. தே. கட்சியை நோக்கிச் செல்லக் கூடாது. அதனால் நன்மை எதுவும ஏற்படாது பொ. ஐ முன்னணி நாட்டிற்குச் செய்த தீமையை ஐ தே. கட்சி ஆட்சி வந்தாலும் அதையே தொடர்ந்து செய்யும். நாட்டிலுள்ள இரு பிரதான கட்சிகளிடமும் பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க எதுவித திட்டமும இல்லை.

ஜே.வி.பியிடமும் எத்தகைய திட்டமும் இல்லை வளவுகளில் உள்ள பழைய சமயல் பாத்திரங்களை வெளியில் கொண்டு செல்வதற்கு சிவப்புக் கொடியை ஜே.வி.பி உபயோகிக்கிறது. எனவே இக் கட்சிகள் எவற்றிற்கும வாக்களிக்க வேண்டாம்,

இக் கட்சிகளை ஒதுக்கித் தளளிவிட்டு சிஹல உறுமய கட்சிக்கு வாக்களியுங்கள் என்று தேரர் தொடர்ந்து பேசுகையில் கூறினார். [எ]

## யுத்தத்தால் சீரழிந்துள்ள மக்களின் வாழ்வு மேம்பாடே எமது இலக்கு

### பிரசாரக்கருத்தரங்கில் யூ.எல்.ரவி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கில் தொடரும் யுத்தத்தில் நொந்து போயுள்ள தமிழ் மக்களின் அபிவிருத்திநடவடிக்கைகளில் ஈடுபடுவதே எமது தலையாய பணியாகும்.

வலி.கிழக்கு பிரதேசசபை உப-தலைவர் யூ. எல் ரவி தனது தலைமையுரையின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற கருத்தரங்கில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

தமது சுய நலத்திற்காகஆயுதக் கலாசாரத்திற்கு வித்திட்டவர்கள் இன்று தார்மீகம் குறித்து பேசுகிறார்கள்.

நாம் கொழும்பிலிருந்து கொண்டு அரசியல் நடத்தவரவில்லை.மக்கள் படும் அல்லாட துயரங்களுக்கு நாமும் முகம் கொடுத்து வருவதுடன் அவ்வப்போது தேவையான நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டு வருகிறோம்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் எமது கட்சி பெரும்பான்மை ஆசனங்களை கைப்பற்றுவது உறுதி; இதில் எவ்வித சந்தேகமும் கிடையாது

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில்தேசிய அரசியல் கட்சிகள் என்று கூறிக்கொள்ளும் கட்சிகள் எவையும் ஆக்கபூர்வமான பங்களிப்பைவழங்கப் போவதில்லை என்றார் (க).

## அடிக்கல் நாட்டுவிழா

(மானிப்பாய்)

சங்கானை நவீன சந்தையில்கடைத் தொகுதி கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா இன்று பி.ப.12 30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் வலி மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந திரிலோகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அடிக்கல்லைநாட்டி வைக்கவுள்ளார். (செ-232)

## பணியாளர் பாரபட்சம். நோயாளர் ஏமாற்றம்

(துன்னாலை)

மந்திகை மருத்துவமனையில் மருத்து எடுக்கும் பகுதியில் மிகுந்த பராட்சம் காட்டப்படுவதாக அங்கு சென்று வரும் நோயாளர்களால் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி வைத்தியசாலையில் பணிபுரிபவர்களின் உறவினர்கள் மற்றும் அறிமுகமானவர்களுக்கு மருந்துகொடுக்கும் இடத்தில் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாகவும் ஏனையோர் நீண்ட நேரம் காத்துநின்றே தமது அலுவலகளைப் பெற வேண்டியிருப்பதாகவும் கூறப்படுகிறது. (உ-41)

தொழுதகை யுள்ளும் படை யொடுங்கும ஒன்னார்
அழுத கண்ணீரும் அனைத்து

குறள்

================

# வலம்புரி

================

## ஆற்றைக் கடக்கும் வரைக்கும்...

பொதுஜன ஐக்கியமுன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய இரண்டு பேரினவாதக் கட்சிகளும் தாம் ஆட்சிக்கு வந்தால் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவோம் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்போமென தேர்தல் மேடைகளில் முழங்கி வருகின்றன.

கடந்த 20வருடங்களாக இடம்பெற்று வருகின்ற இனப்பிரச்சினைக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை உள்வாங்கிய பொது ஜன ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசியக்கட்சியும் பொதுத்தேர்தல் காலங்களில் மட்டும் தீர்வு காணத் துடியாத்துடிக்கும், தமிழர்களுக்கு அதிகாரங்களைக் கொடுப்போம் -

சிங்களவர்கள் - தமிழர்கள் முஸ்லிம்கள் இந்நாட்டின் சகோதரர்கள். நாமெல்லாம் ஓர் குடும்பம், ஈருடல் ஓர் உயிர் என்றெல்லாம் சமரசப் பேச்சு அரங்கைக் கிழித்தெறியும். அரசியல்வாதிகளின் ஆலாவர்ணத்தில் மயங்கிய பொதுமக்கள் தங்கள் பொன்னானவாக்குகளை நம்பிப்போடுவார்கள். வாக்களிப்பு முடிந்தால் போதும் ஆட்சி ஏறும் கட்சி தேர்தல்மேடைப் பேச்சை மறந்துவிட்டு, இலங்கையில்இனப் பிரச்சினைஎன்பதேகிடையாது. இங்கு பயங்கரவாதமே உண்டு. விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் அவர்களோடு பேச்சிக்கே இடமில்லை. யுத்தத்தின் மூலமே சமாதானத்தை அடைய முடியும். தமிழர்கள் இந்நாட்டின் வந்தேறு குடிகள்-

பௌத்தமே இலங்கைத் திருநாட்டின் ஒரே மதம். பௌத்த பீடாதிபதிகள் அரசியலின் முடிசூடாமன்னர்கள் எனக் கதறுவர். என்ன செய்ய முடியும்? கரம் கூப்பி, கண்ணீர் விட்டு வாக்கைப் பெற்றுக் கொண்டு கைகழுவி விடும் சிங்களப் பேரினவாத அரசியற் கட்சிகளின் நிலை கண்டு நெஞ்சு பொறுக்கவில்லை. ஆறு கடக்கும் வரை அண்ணன் தம்பி என்ற பழமொழிக்கு இதுவே நல்லதோர் உதாரணமாக இருக்கும்.

இலங்கையின் ஆட்சிப் பீடத்தை மாறிமாறிஅலங்கரிக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக்கட்சி ஆகியஇரண்டும் தேர்தல் காலத்தில் மட்டுமேஇனப் பிரச்சினை பற்றிச் சிந்திக்கின்றன என்பதை மக்கள் ஒருகணம் சிந்திக்க வேண்டும்.

# குடாநாட்டு மின்வெட்டை நிவர்த்தி செய்ய

# "சக்தி சேமிப்பு மின் குமிழ்" பாவிப்பு பயன்தரும்

## தொழில் நுட்ப நிறுவனம் யாழ்ப்பாணம்

யாழ். குடாநாட்டில கடந்தஇரண்டு வருடத்திற்கு மேலாக இரவு நேரங்களில் (மாலை 6 மணி முதல் 10 மணிவரை) மின்வெட்டானது ஒன்று விட்ட ஒரு நாளைக்கு நடைமுறைப் படுத்தப்படுகின்றது. இந்த மின் வெட்டு நடைபெறும் நேரங்களில் கூடுதலான களவுகளும் தேவையற்ற வன்முறைச் சம்பவங்களும் நடைபெறுகின்றன. அத்துடன் படிப்பதில் பல மாணவர்களும் சிரமத்தை எதிர்நோக்க வேண்டியிருக்கின்றது. மின்சார சபையோ அல்லது அரசாங்கமோ மின்வெட்டை இல்லாமல் செய்வதற்கு எந்த நடவடிக்கையும் இது வரை எடுக்கவில்லை. குடாநாட்டில் வடக்கு புனர்வாழ்வு புனர் அமைப்பு வடகிழக்கு தமிழ் விவகார அமைச்சினால் பல அபிவிருத்தி திட்டங்கள் நடைமுறைப் படுத்துகின்ற பொழுதும் யாழ். குடாநாட்டில் உள்ள சகல மக்களும் பாதிப்படைகின்ற இந்த மின்சார வெட்டை இலலாதொழிப்பதற்கு இது வரையில் எந்தவித அக்கறையும் காட்டப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது

மின்வெட்டை நீக்குவதற்கு இரண்டு வழிகளில் நிவர்த்தி செய்யலாம்.

### சக்தி சேமிப்பு மின்குமிழ்

முதலாவது வழி அரசாங்கம் மின்சார சபையினூடாக K.K S இல் இருந்து பெறப்படுகின்ற 8 MW மின்சக்தியுடன் மேலதிகமாக 4MW-6MW வரை உற்பத்தி செய்யக்கூடிய ஜெனரேற்றர்களைப் பொருத்தி மின்பாவனையாளர்களிற்கு மின்சாரம் வழங்கலாம். அல்லது புனர்வாழ்வு அமைச்சு மின்பாவனையாளர்கள் சகலரதும் நன்மை கருதி ஜெனரேற்றர்களை பொருத்துவதற்கு நிதியுதவி வழங்கலாம் இதற்கு ஏறத்தாழ 80 மில்லியன் ரூபாவில் இருந்து 120 மில்லியன் ரூபாவரை தேவையாகும்.

இரண்டாவது வழியானது. மின்பாவனையாளர்கள் யாவரும் மின்வெட்டை இல்லாமற் செய்யும் நல்ல நோக்கத்தோடுஒருகுறிப்பிட்டகால இடையில் சக்தி சேமிப்பு மின்குமிழை பயன்படுத்துவதன் மூலம் நிவர்த்தி செய்யலாம். மேலும் மின்மானி பொருத்தாத மின்பாவனையாளர்களில் அனேகமானோர்தங்களிற்கு எத்தனை மின்குமிழ் எரிந்தாலும்மொ. ஒரே காசுதான் செலுத்த வேண்டுமாம் என்று கூறிக் கொண்டு சகல மின்குமிழ்களையும் எரியவிடுகின்றனர். தாங்களாகவேமின்வெட்டை உணர்ந்து தேவையற்ற மின் குமிழை அணைப்பதன் மூலம் ஓரளவு மின்சாரத்தை சேமிக்கலாம். அது மின்பாவனையாளர்களின் நடவடிக்கையில் தங்கியுள்ளதாகும். மின்சார சபை எவ்வளவு விரைவாகச் சகலருக்கும் மின்மானி பொருத்த முடியுமோ பொருத்தப்படல் வேண்டும்.

### வெப்பசக்தியாக விரயம்

எமது நிறுவனம் குடாநாட்டில் இருநூற்றுக்கு மேற்பட்ட மின்பாவனையாளர்களிடம்திரட்டியதகவல்களின் படி ஒரு வீட்டில் 5முதல்7மின் குமிழ்கள் வரைமாலை 6மணி முதல் 10மணி வரை தொடர்ச்சியாக எரியவிடப் படுகின்றது.சாதாரண மின் குமிழ்களில் 20%மின்சக்தி ஒளிச்சக்தியாக மாற்றப் படுகின்றது. மிகுதியாக உள்ள 80% மின்சக்தியும் வெப்ப சக்தியாக வீணாக விரயமாக்கப்படுகின்றது. ஆனால் சக்தி சேமிப்பு மின் குமிழில் 100% மின்சக்தியும் ஒளியாக மாற்றப்படுவதால் இதனால் வீணாக மின் சக்தி விரயபடுத்தப்படுவதில்லை. குடா நாடடில் சராசரியாக 42000 மின் பாவனையாளர்களிற்கு மின்சாரம் வழங்கப்படுகின்றது. இதில் 99% மேற்பட்ட வீடுகளில சாதாரண மின்குமிழ்களே பயன் படுத்தப்படுகின்றன.

சராசரியாக ஒவ்வொருவீடுகளிலும் நான் எடுத்த கணிப்பின் படி மாலை 6 மணி முதல் 10 மணி வரை தொடர்ச்சியாக எரியும் மின் குமிழ்கள்.

100 W × 2 = 200W
75W × 4 = 300W
———
மொ. ப = 500W

இதற்கு பதிலாக சக்தி சேமிப்பு மின் குமிழ்களை பயன்படுத்தும் போது

20W × 2 = 40W
15W × 4 = 60W
—
மொ. மி சத்தி 100W

அதாவது சத்தி சேமிப்பு மின் குமிழை பயன்படுத்தும் போது சாதாரண மின் குமிழில் செலவாகும் மின் சத்தியில் 20% மட்டுமே பயன்படுத்தப்படுகிறது 80%ஆன மின் சக்தியை மீதப்படுத்தலாம்.

யாழ் குடாநாட்டில் ஏறத்தாழ 42000 மின் பாவனையாளர்களிற்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. அதில் 7000 வீடுகளிற்கு 2150 K V ஜெனரேற்றர்களை தனித்தனியாக பொருத்தி மின்சாரம் வழங்கப்படுகின்றது. 32000 மினபாவனையாளர்களுக்கு K K.S ஜெனரேற்றர் மூலம் 8 MWமின்சாரம் உற்பத்தி செய்து வழங்கப்படுகின்றது.இதில் அண்ணளவாக 25000 வீடுகள் அடங்கின்றது இதைஇரண்டு பகுதிகளாகபபிரித்து12500, 12500 வீடுகள் என மின்சாரம் இரவில் ஒன்றுவிட்டொரு நாளுக்கு வழங்கப்படுகின்றது.

> யாழ். நகரில் 20 வருடங்களாக மின்துறை சார்ந்த தொழில் கல்வி வழங்கி வரும் யாழ்ப்பாணம் தொழில நுட்ப நிறுவனத்தினராகிய நாம் யாழ். மக்களிடையே மின்சாரத்தின் அவசியத்தையும் மின் பற்றாக்குறையால் யாழ். மக்கள் படும் சிரமங்களையும் கருத்தில் கொண்டு மக்களிடையேயும் நிறுவனங்களிடையேயும் இன்று உள்ள மின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய பின்பற்ற வேண்டிய மின் சேமிப்பு தொழில் நுட்ப முறைகளை அறிமுகப்படுத்த வேண்டிய தார்மீக அவசியத்தின் அடிப்படையில் இக்கருத்தினை முன்வைககிறோம்.

சாதாரண மின் குமிழ் பயன்படுத்தும்போது (100W. 75W)

12500 வீடுகளில் செலவாகும் மின்சகதி
= 12500 × 500
6.2 MW

சக்தி சேமிப்பு மின்குமிழ் பயன் படுததும் போது 12500 வீடுகளில் செலவாகும் மின்சக்தி = 12500 × 100
1.25MW

மீதப்படுத்தக்கூடியமின்சக்தி
6.2MW-1.25MW = 4.95MW

இவ்வாறு சேமிக்கப்படுகினற மின்சக்தி மூலம் மின்சார வெட்டை நிவர்த்தி செய்வதுடன் புதிய மின்னிணைப்பும் வழங்கலாம்.

### யுனிற் கணிப்பு முறை

சாதாரண மினகுமிழ் பயன்படுத்தும் போது ஒரு மாதத்தில் ஒரு வீட்டில செலவாகும் மின்சக்தி

$$\frac{500 \times 4 \times 30}{1000} = 60 \text{ யுனிற்}$$

சக்தி மின்குமிழ் பயன்படுத்தும் போது செலவாகும் மின் சக்தி

$$\frac{100 \times 4 \times 30}{1000} = 12 \text{யுனிற்}$$

ஒரு மாதத்தில் ஒரு வீட்டில் சக்தி மின்குமிழ் பாவிப்பதன் மூலம்

60 — 12 = 48 யுனிற் மீதப்படுத்தலாம்.

மின்பாவனையாளர் பயன்படுத்துகின்ற சில மின் உபகரணங்களும் அதில் மாதாந்தம் செலவு செய்கின்ற மின்சக்தி யுனிற்றில் (சராசரியாக)

| | |
|---|---|
| மின்குமிழ் | 60- 75 யுனிற் |
| Rice Cooker | 30 40 யுனிற் |
| Hote Plate | 30- 50 யுனிற் |
| மின்மோட்டர் (வீட்டுப் பயன்பாடு மட்டும்) | 10- 15யுனிற் |
| T.V | 10- 15 யுனிற் |
| குளிர்சாதனப் பெட்டி | 20- 30 யுனிற் |

### மின்சார சபையினால் அறவிடப்படுகின்ற மின்கட்டண விபரம்

1— 30 யுனிற்வரை யுனிற்றுக்கு 3 ரூபா
31— 90யுனிற்வரை யுனிற்றுக்கு 3 ரூபா 62 சதம்
91—180யுனிற்வரை யுனிற்றுக்கு 7 ரூபா 56 சதம்
180 யுனிற்றுக்கு மேல் யுனிற்றுக்கு 9.40ரூபாசதம் அறவீடு செய்யப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்ற வீடுகளில் மின்குமிழ் தவிர மற்றவற்றில் செலவாகும் மின்சக்தி ஏறத்தாழ 100 யுனிற்றுக்கு மேல் இருக்குமாயின் இவ்வாறான வீடுகளில் மின்குமிழ்களில் செலவாகும் மின்சக்திக்கு (90 யுனிற்றுக்கு மேல் உள்ளதால்) 7 ரூபா56 சதம் யுனிற்றுக்கு அறவிடப்படுகின்றது. சக்திசேமிப்பு மின் குமிழ்பயன்படுத்தப்படுமாயின் வீடுகளில் 48×7.56—362 88 மாதாந்தம் மீதப்படுத்தலாம்.

### ஏற்படக்கூடிய அனுகூலங்கள்

1. புதிய ஜெனறேற்றர்களை பயன்படுத்துவதற்கான பணத்தை மீதப்படுத்தலாம்.
2. புதிய ஜெனறேற்றருக்கு பயன்படுததுகின்ற எரிபொருள் செலவை மீதப் படுத்தலாம்.
3. இந்த எரிபொருள் செலவிற்கான அன்னிய செலவாணியை மீதப்படுத்தலாம்
4. இதனால் உண்டாகின்ற சூழல் மாசடைதலைத் தடுக்கலாம்.
5. ஒவ்வொரு மின்பாவனையாளர்களும் சராசரியாக 100ரூபா முதல் 300ரூபா வரையான மின்சார கட்டணத்தை மாதாந்தம் மீதப்படுத்தலாம்.

### ஏற்படும் பிரதிகூலங்கள்

ஒவ்வொரு மின்பாவனையாளர்களும் 6 மின்சக்தி சேமிப்புமின்குமிழ்களை பயன்படுத்த வேண்டும். இதற்கு ஒவ்வொரு மின்பாவனையாளரும் 2000ம் ரூபாவரையில் செலவு செய்தல் வேண்டும். ஆனால் எல்லாமின்பாவனையாளர்களும் ஒரேதடவையில் செலவு செய்தல் என்பது இயலாத காரியமாகும். இதற்கு கொழும்புமாவட்டத்தில் நடைமுறையில் உள்ளது போன்றுமின்சாரசபையானது இதனை வழங்கி மாதாந்த கட்டணமாக ஒரு வருடத்தில் இதனை அறவீடு செய்யலாம். மின்பாவனையாளருக்குஇதில் எதுவித நட்டமும்ஏற்படாது. ஏனெனில் அண்ணளவாக வீண்விரயமாக்கப்படும் மின் கட்டணத்தை செலுத்தினால் போதுமானதாகும். □

## தினசரி தியானம்

## வருந்துதற் கொன்றுமில்லை

ஓயாக் கவலையினால் உள்ளுடைந்து
வாடாமல்
மாயாப் பிறவி மயக்கறுப்பதெக்காலம்?

பத்திரகிரியார்

பரிபூரணானந்தமே, உனது பேரமைப்பில் குறைபாடு ஒன்றுமில்லை என்பதை நான் கண்டுகொள்வேனாக.

தரையில் நிற்பவர்களுக்கு மேடுகளும் மடுக்களும் தென்படுகின்றன. மலையுச்சியினின்றுபார்ப்பவர்க்கோ எல்லாம் ஒரே சமவெளியாம். அண்டத்தின்பேரமைப்பை உள்ளபடி காண்கின்றவர்களுக்கு அதன் நடைமுறையில் குறைபாடு ஒன்றும் தென்படுவதில்லை. ஆதலால் அவர்களுக்கு வருந்துதற்கு ஒன்றுமில்லை.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

# காணாமல்போனோர் சங்கத்தின் மறியல் போராட்டத்திற்கு ஆதரவு

## யா.பல்கலைமாணவஒன்றியம்அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாடு 1995ல்ஆக்கிரமிக்கப்பட்ட பின்னர் கிருஷாந்தி, ராஜினி, சாரதாம்பாள் போன்றோர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டது மட்டுமன்றி ஆயிரக்கணக்கான இளைஞர்களும் யுவதிகளும் கைதுசெய்யப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கி சிறைகளில் அடைக்கப்பட்டனர். இளைஞர்கள், யுவதிகள். குடும்பத்தலைவர்கள், குழந்தைகள், வயோதிபர்கள், மதகுருமார், பாடசாலை, பல்கலைக்கழகமாணவர்கள் என்ற பேதமின்றி 600க்கு மேற்பட்ட அப்பாவி தமிழ் மக்கள் சித்திரவதை செய்யப்பட்டு அடித்தும் வெட்டியும் கொல்லப்பட்ட பின்னர் புதைக்கப்பட்டனர்.

இது தொடர்பான உண்மைகள் பாடசாலை மாணவி கிருஷாந்தியின் பாலியல் வல்லுறவு கொலை வழக்குடன் சம்பந்தப்பட்ட ராஜபக்ஷ என்ற ஸ்ரீலங்கா இராணுவ அதிகாரி கொடுத்த தகவல்களின் அடிப்படையில் அம்பலப்படுத்தப் பட்டது. இதன்போதுமேலும் சிலஇராணுவத்தினர் கைது செய்யப்பட்ட போதும் எவரும் இன்னமும் தண்டிக்கப்படவில்லை.

மாறாக அக் காலப்பகுதியில் இராணுவ உயர் அதிகாரிகளாக இருந்தவர்களுக்கு சந்திரிகாவினால் வெளிநாட்டு தூதுவர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் காணாமல் போனோர் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு இன்று நடைபெறும் மறியல் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வெளியிட்ட அறிக்கையில்குறிப்பிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது

பலபெண்கள் விதவைகள் ஆகி வருமானங்கள் இன்றி தவிக்கின்றனர் நூற்றுக்கணக்கான பிள்ளைகள் பாடசாலை செல்ல முடியாமல் வறுமையில் சிக்கி தெருவில் பிச்சையெடுக்கும் நிலை காணப்படுகின்றது கலாசார சீரழிவுகள் அதிகரித்துள்ளன. காணாமல் போனோர் சங்கங்களினால் அரசிற்கு அழுத்தம் கொடுக்கப்படும் போது அவர்களையும் உலகையும் ஏமாற்றுவதற்காக ஆணைக்குழுக்கள் மட்டும் அமைக்கப்படுகிறன.

இன்று காணாமல் போனோர் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப் ட்டு நடை பெறும் மறியல் போராட்டத்திற்கு எமது முழுமையான ஆதரவினை வழங்குவதோடு எவ்விதமான அரசியல் தலையீடும் இன்றி இப் போராட்டம் மேலும் முன்னெடுக்கப் படுமாயின் யாழ் பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் எமது முழுமையான ஆதரவினையும் வழங்கத் தயாராகஉள்ளோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# 'காற்றுக்கென்னவேலி' திரையிடுவதற்கு அனுமதி

(சென்னை)

தமிழ்ப்போராளி ஒருவரின் வாழ்க்கை வரலாற்றை சித்திரிக்கும் வகையில் தென்னிந்தியாவில் தயாரிக்கப்பட்ட 'காற்றுக்கென்னவேலி, என்ற திரைப்படத்தைத் திரையிடுவதற்கு இந்திய நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

இலங்கை தமிழ்ப் போராளி ஒருவரின் வாழ்க்கைவரலாற்று சம்பவங்களை பின்னணியாகக்கொண்டு தயாரிக்கப்பட்ட இத்திரைப் படத்தை வெளியிடுவதற்கு இந்திய அரசு தடைவிதித்திருந்தது

எனினும் இப்படத்தின் தயாரிப்பாளர் அரசின் தடைக்கு எதிராக இந்திய உயர் நீதிமன்றில் வழக்கொன்றை தாக்கல் செய்திருந்தார். இதனை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிமன்றம் மேற்படி திரைப் படத்தை திரையிடுவதற்கான அனுமதியை வழங்கியுள்ளது. (ந-4)

### வன்னி...

தர் வவுனியா செயலகத்திலும் நேற்றுக் கூட்டியிருந்தார்.

இராணுவப் பொறுப்பதிகாரி கேணல் மகேஸ் சமரசிங்கா வேட்பாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்குகையில், தேர்தல் சமயத்தில் மிகவும் அவதானமாகவும், ஒருவரையொருவர் குற்றம் சாட்டுவதை விடுத்து அமைதியான முறையில்நிதானமாக நடந்து கொள்ளுமாறு கேட்டதுடன் கடந்த வெள்ளிக்கிழமை பூந்தோட்டத்தில் இடம் பெற்ற கசப்பான சம்பவத்திற்கு கவலையும் தெரிவித்தார்.

வவுனியா செயலகத்தில் நடந்த கூட்டத்தில் வவுனியா சிரேஷ்ட பொலிஸ்அத்தியட்சர் ஹேரத் கலந்து கொண்டு தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு சகலருக்கும் பாகுபாடு காட்டாது பொலிசார் நடந்துகொள்வார்கள் என்றும் கூட்டங்களுக்கான அனுமதியை பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை டிசம்பர் மாதம்5ம்திகதி நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலை அடுத்து இராணுவக் கட்டுப்பாட்டு வன்னிப் பிரதேசத்தில் பாதுகாப்பு சோதனை நடவடிக்கைகள தீவிரப் படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

# ஜே.வி.பி.தலைவர் நாடு திரும்ப கடவுச்சீட்டு அனுப்பி வைப்பு

நாடுகடந்த நிலையில் லண்டனில் வாழ்ந்து வரும் ஜே.வி பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்கவுக்கான புதிய கடவுச்சீட்டு கடந்த திங்கட்கிழமை லண்டனிலுள்ள இலங்கைத்தூதரத்திறகு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது. ஜே.வி.பிக்கும் பொது ஜன ஐக்கிய முன்னணிக்குமிடையிய புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒப்பமிடப்பட்டதைத் தொடர்ந்து அமரசிங்க இலங்கை திரும்புவதற்கு தீர்மானித்திருந்தார்.

இலங்கை வரும் அவர் ஜே.வி.பியின் பிரசாரத்தில் ஈடுபடுவார் அடுத்த அரசாங்கத்தை ஈ.பி.டி.பியுடனும் ஜே.வி.பி யுடனும் சேர்ந்து தாம் அமைக்கப் போவதாக முன்னாள் சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்க தனது நெருங்கிய சகாக்களுக்கு தெரிவித்துள்ளார். (ந)

# எந்தக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் நிபந்தனை விதித்தே தீருவோம்

## வவுனியாவில் விநாயகமூர்த்தி

(வவுனியா)

கடந்த ஏழு வருடங்களாக பொதுஜனஐக்கிய முன்னணி அரசின் ஆட்சிக்காலத்தில் தமிழ்மக்கள் பல துன்பங்களை அனுபவித்துள்ளனர். இத்துன்பங்களில் இருந்து விடுபட தமிழ்மக்களுக்கு ஆட்சி மாற்றம கட்டாயம் தேவைப் படுகிறது. இந்நிலையில் சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சியை தோற்கடிப்பதே எமது நோக்கமாகும் என்று அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் தலைவரும், முன்னாள் யாழ் மாவட்ட எம். பியுமான அ. விநாயகமூர்த்தி மேற்கண்டவாறு கூறினார்.

நான்கு தமிழ்க்கட்சிகள் கூட்டமைப்பின் முதலாவது தேர்தல் பிரசாரக்கூட்டம் செட்டிகுளம் பிரிவில் முதலியார் குளத்தில் நேற்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசியபோதே அ. விநாயகமூர்த்தி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் சந்திரிகாவின அரசை தோற்கடிக்க வேண்டுமென்பதற்காக நாம் ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிக்கிறோம் என்ற கருத்துப் பிழையானது எந்தக்கடசி ஆட்சியைக்கைப் பற்றினாலும் அந்த அரசுக்கு நாம் நிபந்தனையை விதிப்போம் யார் அதனை ஏற்றுக் கொள்கிறார்களோ அவர்களை ஆதரிப்பதுதொடர்பாக பின்னர் தீர்மானிப்போம் என்று கூறினார்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட கலாநிதி ந. குமரகுருபரன் மற்றும் வன்னி மாவட்ட நான்கு தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பு வேட்பாளர்களும் உரையாற்றினார்கள். (ம)

# இந்திய பிரதமர் ரஷ்யா பயணம்

(புதுடில்லி)

மூன்று நாடுகளுக்கான பயணமாக இந்தியப் பிரதமர் வாஜ்பாய் முதலில் நேற்று ரஷ்யா சென்றுள்ளார்.

அவருக்கு ரஷ்யாவில்மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

### 48 வன்முறை

தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாக பொலிஸ் தலைமையகம் நேற்று அறிவித்துள்ளது.

பொலிஸ் தலைமையகத்தில்செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளில் ஐக்கிய தேசியக் கட்சி 142 முறைப்பாடுகளையும் பொதுஜன ஐக்கிய முன்னணி 101 முறைப்பாடுகளையும் ஜே. வி. பி 11 முறைப்பாடுகளையும் செய்துள்ளன. (வ)

### நாட்டில்

மீண்டும அறிமுகப்படுத்தவும மக்கள் இம்முறை வாக்களிக்கவேண்டும்.

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கா தான இந் நாட்டில் கட்டளை இடும அதிகாரியாக இருப்பதுடன் அமைச்சர்களையும், செயலாளர்களையும் நியமிக்கும் உரிமையும் கொண்டிருபபார்.

இத் தேர்தலில் 120ஆசனங்களைப்பெற்றால்தான்ஐக்கிய தேசியக் கட்சிஆட்சி அமைக்க முடியும் ஆனால் இதற்கான சந்தர்ப்பங்கள் எமக்கே உண்டு.

ஐக்கிய இலங்கையா அல்லது நாட்டைத் துண்டாடுவதா என்பதை மக்கள் தீர்மானிப்பார்கள் பிரிவினைக்கு அரசு ஒரு போதும் சம்மதிக்கமாட்டாது.

இத் தேர்தலில் பொதுஜன ஐக்கியமுன்னணிபெருவெற்றி ஈட்டும் என்பதில் எவரும் சந்தேகம் கொள்ள வேண்டியதில்லை என்றுப் பிரதமர் தெரிவித்துள்ளார். (வ)

### துருப்பிடித்த

அவ்வாறு அவர் நடந்து கொண்டால் ஜே ஆர் அரசியலமைப்பு அதிகாரத்தின் மூலம் துருப்பிடித்த ஆயுதங்களுக்கு உயிரூட்ட வேண்டி வரும் என்றும் அனுரா எச்சரித்துள்ளார். (ம)

### வவுனியா...

நடைபெற்ற இவ்வார்ப்பாட்டத்தில் தமிழ்,சிங்கள மொழிகளில் எழுதப்பட்ட சுலோகங்களை ஏந்தியவாறு ஆதரவாளர்கள் காணப்பட்டனர்.

அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் தாக்கப்பட்டமையைக் கண்டித்தே இவ்வார்ப்பாட்டம் இடம் பெற்றுள்ளது. (ந-4)

### தமிழ்க்கட்சி...

டுமென்று ரெலோவின் முன்னாள் வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன் கேட்டுக் கொண்டுளளார்.

தமிழ் தேசிய ஐக்கிய முன்னணியினரின் காரியாலையம் ஒன்றை வவுனியா வைரவர் கோவில் வீதியில் திறந்து வைத்துப் பேசியபோதேசெல்வம் அடைக்கல நாதன் மேற்கண்டவாறு கேட்டுள்ளார்.

ஈ. பி. ஆர். எல். எவ். ஐச் சேர்ந்த சுரேஷ் பிரேமச்சந்திரன் உதய சூரியன் கொடியை ஏற்றிவைத்தார். (ம)

### யாழ். குடாவில்...

திணைக்களம் அறிவித்துள்ளது.

யாழ் மாவட்டத் தேர்தல் பிரிவுடன் கிளிநொச்சி மாவட்டத்தின் தேர்தல் பிரிவும் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது.

தேர்தல் கடமைகளில் ஈடுபடுவதற்கு யாழ் மாவட்டத்தில் சுமார் 3500 அரச ஊழியர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

யாழ்ப்பாணத்தில் தேர்தலின் போது பாதுகாப்பு நடவடிக்கைகளில் இம் முறை பொலிசாருடன் இராணுவத்தினரும் இணைந்து செயற்படுவர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# கட்டவுட்டுகளை அகற்றுவதில் அசமந்தம் காட்டினால் கடும் நடவடிக்கை

(கொழும்பு)

பொது இடங்களில் காணப்படும் அரசியல்வாதிகளின் கட்டவுட்டுக்களை அகற்றுவதில் அசமந்தமாகச் செயற்படும் பொறுப்பதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரத்ன தெரிவித்துள்ளார்

பொறுப்பதிகாரிகள் சிலர் இது தொடர்பாக ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளனர். வேறு சிலர் அசமந்தப்போக்கைக் காட்டுகிறார்கள். அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந)

# பிரதேச செயலகங்கள் தோறும் கலாசார நிதியம் வேண்டும்

## மேலதிக அரச அதிபர் தெரிவிப்பு

(அளவெட்டி)

பிரதேச செயலகங்கள் தோறும் கலாசார நிதியம் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என யாழ், மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் தெரிவித்துள்ளார்.

வலி. வடக்கு பிரதேசசெயலகத்தில் பிரதேச செயலர் திருமதி பத்தினியம்மா திலக நாயகம்போல்தலைமையில் கடந்த 3ஆம் திகதி இடம் பெற்ற வைபவத்தில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும்தெரிவிக்கையில்; வலி. வடக்குப் பிரதேசம் ஒருதன்னிறைவு கொண்ட பிரதேசம்.

புகையிரத நிலையம் சீமெந்து தொழிலகம் விமான நிலையம், துறைமுகங்கள் போன்ற முக்கியநிலையங்கள் இப்பகுதியில் காணப்படுகிறது.

இன்று அரசியல் காரணங்களால் இப்பிரதேசம் சீர்குலைக்கபபட்டாலும் அம் மண்ணின் பாரம்பரியங்களை உயிரோட்ட முள்ளவையாக இன்றும் காணப்படுகின்றமை சிறப்பிற்குரியது என்றார்.

கலை நிகழ்வுகள் பல இடம் பெற்றதுடன் பிரமுகர்களபலரும் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். (க-237)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு நவம்பர் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.